1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
'CATHOLIC PRESS'
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

76-ம் புத்தகம் 49-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு மார்கழிமாதம் 13-ந்திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## கத்தோலிக்க சமாச்சாரம்

### கிறீஸ்து இராசா வாழ்க!

இரும்புத்திரைநாடுகளில் ஒன்ருகிய செக்கோசிலவக்கியாவின் தலைப்பட்டணமாகிய பிறேக்நகரிலே கம்யூனிஸ்தர்களின் பரவணியான குற்றச்சாட்டுகளின் பேரிலே கத்தோலிக்க சனத்தலைவர்கள்மூவர் அந்தரங்கமாக விசாரணை செய்யப்பெற்றுச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதும் "கிறீஸ்துஇராசா நீடூழி வாழ்க!" எனஒருங்கேஆர்ப்பரித்தார்கள். பிரன்ரிசேக் வலெனு, யோசெவ் புளோசெக், மெசிஸ்லாவ் ருசிக்என்றஇம்மூவரும் 15 முதல் 25 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர். இம்மூவருமே பிறேக்நகர கத்தோலிக்கசேவையில் மிகமேம்பட்டுவிளங்கினுர்கள்.

### மனந்திரும்பிய சீமாட்டி

பிரித்தானிய ஆகாயப்படைப் பிரதமமாஷலான சேர்ருேபேட் புறாக்-போபாம் அவர்களின் பாரியாரான ஒபல்மேரிசீமாட்டி மனந்திரும்பி ஒக்ஸ்போட்ஷயரிலுள்ள ஹெத்என்னுமிடத்தின் பங்குவிசாரணைக் குரவரால் கத்தோலிக்க திருமறையில் சேர்த்துக்கொள்ளப் பெற்றிருக்கின்ருர். அத்தருணம்இவர் பரிசுத்த பாப்பரசரின் ஆசியையும் பெற்றுக்கொண்டார். சேர் ருேபேட் புறாக்-போபாம்அவர்கள் அங்கிளிக்கன் புருெட்டஸ்தாந்த சபையைச்சேர்ந்தவர். ஓர்காலம் கினியாநாட்டின் தேசாதிபதியாய்இருந்தவர்.

### சங்கிலி பயமுறுத்த மாட்டாது

"உமதுவாழ்க்கையின் சரிதையைஎழுதும்" என்று சீனக்கம்யூனிஸ்த சிறைச்சாலைஒன்றிலே வண. போல்பொங் சுவாமியாருக்கு ஜெயிலர் கட்டளையிட்டான். அமெரிக்கமிஷனரிமாருடன் கலந்து தொண்டாற்றியதையிட்டுச் சுவாமியார் கைதுசெய்யப் பட்டிருந்தார். கணுக்கால் சங்கிலிகள்கொண்டு சிறைச்சாலைச் சிற்றறையிலே பிணித்துவைக்கப் பட்டிருந்த சுவாமியாரோ, கத்தோலிக்க குருமாருக்குச் சங்கிலிகள் புதியனவல்ல; அப்போஸ்தலரின் காலமுதல் அறிந்தவைகளேஎன எழுதியிருந்தார். "அப்போதுகுருமாராகியநீங்கள் சங்கிலிகளைத்தரிக்கப் பழகியிருக்கிறீர்கள்; அதனுல் இன்னும்சற்றே கூடுதலாகக்கொடுப்போம்" என்று ஜெயிலர்கூறினன். இப்போது வண. பொங்சுவாமியார் முழங்தாள்வரையில்தொடுகிற மூன்று சங்கிலிகளை அணிந்திருக்கிருர்.

### கத்தோலிக்க பெரும்பான்மை

ஆபிரிக்காவிலே கிழக்குபெல்ஜிய கொங்கோவிலுள்ள உருண்டிநாட்டில் 53 வருடகால மிஷனரியதொண்டின்பலனுய் அங்கு கத்தோலிக்கர் ஏனையவர்களிலும் கூடியதொகையினராய் இருக்கின்றனர். தற்போது அந்நாட்டிலுள்ள கத்தோலிக்கர் 9,14,000 பேர், 1900-ம் ஆண்டு 34 கத்தோலிக்கரே இருந்தனர். சென்றவருடத்தில் அங்குமனந்திரும்பிய 30,000 சனங்கள் ஞானஸ்நானம் அருளப்பெற்றிருக்கிறுர்கள்.

### பாத்திமா காட்சிப் படம்

பாத்திமாவிலேபரிசுத்ததேவதாயார் அளித்தகாட்சியையும், அங்குநிகழ்ந்த அற்புதங்களையும் ஆதாரமாகக்கொண்டு பாத்திமாபில்ம் ஒன்றைத் தயாரிக்க ஹொலிவூட்டிலே வார்னர்சகோதரர்கள திட்டஞ்செய்கின்ருர்கள். தேவதாயார் காட்சியருளிய பிள்ளைகளாகநடிப்பதற்குப் பில்ம்பயிற்சியில்லாத ஓர்சிறுவனையும், இருசிறுமிகளையும் அவர்கள் தேடிவருகின்ருர்கள். பில்ம் உற்பத்தியாளரான பிறையன் வோய்அவர்கள் பாத்திமாவிலே பரிசுத்தவருட திருச்சடங்குகளின்போது 8,000 அடிநீளமான படத்தைத் தயாரித்திருக்கிருர்.

### உண்மையான தோழர்கள்

"கம்யூனிஸ்ததோழர்கள் இப்போது நம்முடன் இல்லை; திருச்சபைதான் இங்கேஎங்களுக்கு உதவிசெய்கிறது" என்று இத்தாலியிலே பெருவெள்ளத்தால் பாழடைந்த காற்ருணியபகுதியில் வீடுவாசல்களை இழந்த குடும்பங்கள் கூறியிருக்கின்றன. இவர்கள் சமீபகாலத்திலே இத்தாலிய பொதுத்தேர்தலின்போது கம்யூனிஸ்தர்களால் வெகுவாக [illegible] கள். பாப்பரசரது சகாயக்கம் மிஷன் ஆகாயவிமானங்கள். மோட்டர்லோஞ்சுகள், வண்டிகள்மார்க்கமாக இந்தக்குடும்பங்களுக்கு வேண்டியஉதவிகளை அனுப்பிவருகின்றன. ஞாபகத்துக்கெட்டிய காலத்திலே இத்தகையவெள்ளப்பிரவாகம் இத்தாலியில் உண்டானதேயில்லை.

### கத்தோலிக்கரின்உதவி

அமெரிக்கதேசிய கத்தோலிக்க சேமநல்வாழ்வுச் சங்கத்தின் யுத்தகஷ்ட நிவாரண சேவைப்பகுதியானது சென்றவருடத்திலே கோறியாவுக்குப் 16,66,666 பவுண் பெறுமதியான 1,701 தொன்கஷ்டநிவாரண பொருளை அனுப்பியிருக்கிறது. இதுஅமெரிக்க ஐக்கிய தேசத்திலே சுயேச்சையாகச் சேகரித்துஅனுப்பப்பட்டஉதவியெல்லாவற்றிலும் மூன்றில் இருபங்குக்கு மேற்பட்டதாகும். உலகமுழுவதிலும் அவசிய தேவை ஏற்பட்டிருந்தபகுதிகளுக்கு முன்சொன்ன கத்தோலிக்கசேவைப்பகுதி 34,266 தொன்நிறைகொண்ட உணவு, உடை, மருந்து ஆதியவைகளை அனுப்பியிருக்கின்றது. இவற்றின்பெறுமதி72,97,600பவுண்.

### பேதுருவானவர் கல்லறை

ரோமாபுரி, அர்ச். பேதுருவானவர் மகாலயத்தின் பெரிய அடுத்தாருக்குநேர்கீழே பேதுரு அப்போஸ்தலரின் கல்லறை கண்டுபிடிக்கப்பெற்ற முழுச்சரிதையையும் 11 கினிபெறுமதியுள்ள ஓர்புத்தகத்திலேபரிசுத்த பாப்பரசர் சமீபத்தில் வெளியிடுவாரென வத்திக்கானிலிருந்து சென்ற திங்கட்கிழமை செய்திகிடைத்திருக்கிறது. இப்புத்தகம் வத்திக்கான் அச்சகத்திலிருந்து அடுத்தஇருவாரத்துள் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இக் கல்லறை சம்பந்தமாகப் பத்துவருட ஆராய்ச்சிநடத்திய புதைபொருள் ஆராய்ச்சியாளரையும், விஞ்ஞானிகளையும்கொண்ட கம்மிஷனுல் கடந்த இருவருடகாலத்திலும் தொகுக்கப்பட்டலாயிற்று. இப்புத்தகம் அர்ச். பேதுருவானவர் மகாலயத்தின் பெரியஅடுத்தாருக்குக்கீழே இருக்கின்றகல்லறை உள்ளபடியே பேதுருஅப்பேஸ்தலருடையதுதான் என்பதை அத்தாட்சிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட இவ்வுண்மைகளை எடுத்துக்கூறுமெனத் தெரியவருகிறது.

## ஆகமனகாலத்தின் 3-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு
(அரு. 1: 19—23)

அக்காலத்தில் யூதர் எருசலேம் நகரிலிருந்து ஆசாரியர்களையும் இலேவியர்களையும் அருளப்பரிடம் அனுப்பி, நீர் யாரென்று வினவும்போது, அவர் உள்ளதை மறைக்காமல் ஒப்புக்கொண்டு: நான் கிறீஸ்து அல்லன்என்று வெளிப்படுத்தினுர். மீளவும்அவர்கள்: பின்னுமென்ன? நீர் எலியாசென்பவரோவென்று அவரைக்கேட்டார்கள். அதற்கும் நான்அல்லன்என்ருர். நீர் தீர்க்கதரிசியோ? என்றதற்கும், அல்லனென்று மறுமொழிசொன்னுர். ஆகையால் அவர்கள்: எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் மறுமொழி தரும்படியாக, நீர் யார்? உம்மைக்குறித்து என்ன சொல்லுகிறீரென்று அவரைக் கேட்டார்கள். அதற்கு அவர்: தீர்க்கதரிசியாகிய இசையாசென்பவர் வசனித்தபடியே ஆண்டவருடைய வழியைச் செவ்வைப்படுத்துங்கள்என்று வனுந்தரத்திற் கூறுகிறவனுடைய குரலொலிநானேஎன்ருர். அனுப்பப்பட்டவர்களில் சிலர் பரிசேயர்களாயிருந்தார்கள். மீளவும் அவர்கள் அவரைவினவி: நீர் கிறீஸ்துவுமல்ல, எலியாசென்பவருமல்ல, தீர்க்கதரிசியுமல்லவென்ருல் பின்னைஏன் ஞானஸ்நானங்கொடுக்கிறீரென்ருர்கள். அருளப்பர் அவர்களுக்கு மறுமொழியாக வசனித்ததாவது: நான்சலத்தினுல் ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; ஆனுல், நீங்கள் அறியாத ஒருவர் உங்கள்மத்தியில் நிற்கிருர். எனக்குப்பின் வரவிருக்கிறவரும் என்னிலும் மேம்பட்டவரும் அவர்தான். அவருடைய பாதரட்சையின் வாரைஅவிழ்க்கநான்பேறுபெற்றவனல்லன்என்ருர். இவைகள் பெத்தானியாவில் யோர்தான் நதிக்கப்பால் சம்பவித்தன. அவ்விடத்தில் அருளப்பர் ஞானஸ்நானங் கொடுத்துக் கொண்டிருந்தார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்மஸ் விழாச் சிறுகதைப் போட்டி

முதலாவது பரிசில் பெற்றது.

# "ஒளி பிறந்தது"

"திவ்வியபாலா! நான் பிறந்த நாட்தொட்டு இற்றைவரை சுகமென்பதை அறியேன். உபத்திரவங்களும், துன்பங்களுமே என் பொக்ஷங்களாய் இருக்கின்றன. இப்புதையலை எனது அத்தானின் மனந்திரும்புதலுக்காக உமக்கு ஒப்படைக்கின்றேன். உலகஆறுதல் அறியாதஎனக்கு இந்தத் தேவஆறுதலை யாவது என்மேலிரங்கி அளித்தருளும்"

அன்று மார்கழிமாசம் 23-ந் திகதி. சோதிநாதனின்காரியாலயத்தில் உத்தியோககடமைபார்க்கும் எல்லோர்முகத்திலும் ஒரேஆனந்தம். கிறிஸ்மஸ்விடுமுறைக்காக அன்று காரியாலயம் மூடப்படுகிறது. தங்கள்சொந்தஊரை—தந்தைதாயரை — அருமைச்சோதரரை—மனைவிமக்களைக் காணப்போகிறோம் என்றதிருப்தி எல்லோர்முகத்திலும் பிரதிபலித்தது. ஆனால், சோதிநாதனின் முகத்தில்மட்டும் ஏன் இவ்வளவு கலவரம்? அவன்தான் ஓர் சிவிலுத்தியோகஸ்தன், அதாவது ஒரு சி. சி. எஸ். ஆயிற்றே! இன்னமுமே இல்லறவாழ்க்கையில் இறங்கியிராத சி. சி. எஸ். ஐக் கிறிஸ்மஸ்விடுமுறையில் எத்தனை ரதிகள்—எத்தனை ரம்பைகள் — எத்தனை மேனகைகள் வட்டமிடப் போகிறார்கள்! எத்தனை மனோகரமான 'டின்னர்கள்', 'போல்றூம்' (Ball-room) டான்சுகள் அவனதுமனக்கண்முன் இன்று தாண்டவமாட வேண்டியவை! ஆனால், சோதிநாதன் ஏன் அந்த ஏழைப்பெண்ணைமட்டும் நினைத்துநினைத்துக் கலங்கவேண்டும்? ஏழைப்பெண்ணா? இல்லை, இல்லை. தெய்வ சங்கல்பத்தால் ஏழ்மையிற் தள்ளப்பட்ட பாவிப்பெண். செல்வக் குவியலிற் பிறந்தும் துன்பக்குப்பையில் எறியப்பட்டபெண். சுகம்அனுபவிக்கப் பிறந்தும் அதனைச் சுகித்தறியாத பெண். செய்நன்றிமறவாத் தன்மையும், இரத்தத்துடிப்பும், இளகியமனச்சார்பும் ஒன்றுசேர்ந்து அவளை மனைவியாக்கிக்கொள்ளும்படி சோதிநாதனை ஏவின. அதிர்ஷ்டம் அவளை அணுகிய வந்தது. அவளோ அதை உதறிவிட்டாள். ஆம். சோதிநாதனின்காதலைச் சத்தியவதி நிராகரித்தாள். இந்தக் கிறிஸ்மஸ் விடுமுறையில் சத்தியவதியைத் துன்பச்சிறையிலிருந்து மீட்டுத் தன் துணைவியாக்கிக்கொள்ள வேண்டுமென அவன் திட்டமிட்டிருந்தான். தனதுதிட்டத்தைக் கடிதமூலம் சத்தியவதிக்குத் தெரிவித்திருந்தான். அதற்குப்பதிலாக நேற்றுச் சத்தியவதியிடமிருந்து கிடைத்த கடிதந்தான் சோதிநாதனுக்கு இவ்வளவு கலவரத்தைக் கொடுத்தது.

"அத்தான்! தாங்கள் ஏழை என்மேல் கொண்டபரிவுக்காகக் கோடி நமஸ்காரம். பலகாரணங்களால் தங்கள் எண்ணத்துக்கு இணங்கமுடியாதிருக்கிறது. தங்கள் காதலினும் மேலானதொன்றைத் தங்களிடம் எதிர்பார்க்கிறேன். தாங்கள் ஒரு சி. சி. எஸ். நானோ ஒரு ஏழைஅறிவிலி. ஆகிலும் இது தங்களுக்குவிளங்காத ஒருபுதிரா யிருக்கலாம். எதற்கும் இந்தக்கிறிஸ்மஸ் விடுமுறைக்குத் தாங்கள் கட்டாயம் இவ்விடம் வரவேண்டும். தங்கள் மன்னிப்பைக் கோருகிறேன்.

தங்கள்வரவை எதிர்பார்க்கும்,
அன்புள்ள சத்தியவதி.

சோதிநாதன் தன் இரண்டாவது பராயத்திலுள்ளேயே தனது அருமைத் தாய்தந்தையர் இருவரையும் பறிகொடுத்துவிட்டான். பொருட்செல்வம் போதியளவிருந்தும் புத்திரபாக்கியம் இல்லாக்குறையால் வருந்தியிருந்த சோதிநாதனின்மாமி அவனைத் தன்சுவீகாரப் புத்திரனாகக் கையேற்றுக்கொண்டாள். பெற்றோரின் பிரிவு தெரியாமல் தனதுமாமியின் அரவணைப்பில் தன் பத்தாவதுவயதை அவனும் தாண்டிவிட்டான். அவனுக்குப் பதினொராவதுவயது நடக்கும்போது அவன்மாமி முதன்முறையாகக் கர்ப்பவதியானாள். பிரசவகாலமும் அண்மியது. காலம்பிந்திக் கர்ப்பந்தங்கினமையின் பிரசவவேதனை அதிகமாயிருந்தது. தன்வயிற்றிலிருந்த சத்தியவதியைப் பூமியின்மடியில் கிடத்திவிட்டு அந்தோ! கண்ணைமூடிவிட்டாள் சோதிநாதன்மாமி! ஆனால், அதிர்ஷ்டம் சோதிநாதனை விட்டகலவில்லை. அவ்வருடம் நடைபெற்ற 5-ம் வகுப்பு வித்தியாவெகுமதிப் பரீட்சையில் மாகாணத்தில் முதல்வனாக அரங்கேறிச் சர்வகலாசாலைப்படிப்பு முடியும்வரை அரசாங்க வித்தியாவெகுமதிக்குப் பாத்திரமானான். ஓர்அரசாங்க மத்தியவிடுதிப்பாடசாலையில் சேர்ந்து கல்விகற்கத் தொடங்கினான். ஆனால், சத்தியவதியின் விஷயத்தில் மட்டும் கருமம் வித்தியாசமாயிற்று. "தமது காதல்மனைவியைக் காலனுக்குக் கையளித்தபீடை" என்று சத்தியவதியின் தந்தையார் அவளைத்தூற்றினார். "குழந்தையின்சேமத்திற்காக" என்ற சாட்டுடன் சீக்கிரமாக மறுவிவாகமும் செய்துகொண்டார். செங்கமலம்தான் அவருக்கு இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்பட்ட தர்மபத்தினி. சத்தியவதி மாட்டுத் தந்தைக்குக் கரிசனையே இல்லையென்றால், சிற்றன்னையைப்பற்றிக் கேட்கவாவேண்டும்? சத்தியவதியின்வீட்டிலே சிற்றன்னையின் கோரரூபம் தலைவிரித்தாடத் தொடங்கியது. அவள்தந்தையார் குழந்தையைக் கண்ணால் பார்ப்பதேகிடையாது. போதாக்குறைக்கு இளையாள்மோகம் தலைக்கேறியிருந்தது. இந்த நிலைமையில் சத்தியவதியின்நிலைமை பெரும் பரிதாபத்திற்குரியதாய் இருந்தது.

தந்தையின்பரிவு— தாயின்பாசம்— என்பவற்றை அவள் அறியாள். தன் வயதுக்குமிஞ்சிய வேலைகளைச்செய்யும்படி செங்கமலம் நிர்ப்பந்தப்படுத்தினாள். சிறுமியர்க்குரிய விளையாட்டுகள்—கொண்டாட்டநாட்கள்—இனிய தின்பண்டங்கள் என்பனவெல்லாம் அவளுக்குக் கனவில் மாத்திரந்தான். அழுகிய பழங்கள் — எஞ்சிய உணவுகளே அவள்உயிரைப் பிடித்துவைத்திருக்கும் சாதனங்கள். பொதுவிலே சத்தியவதி ஓர் வீட்டுவேலைக்காரியின் ஸ்தானத்தையே வகித்துவந்தாள். அவளுக்குப் பள்ளிப்பராயம் வந்தபோது உலகஆசாரத்துக்காக அவள் தந்தையார் அவளைப் பாடசாலைக்கு அனுப்பிவைத்தார். அதன்மேல் அவளுக்குச் சிறிது ஆறுதல்கிடைத்தது. பாடசாலைநேரங்களிலாவது மட்டுக்குமிஞ்சிய வேலைப்பாரத்தினின்று சிறிது விலகி இருக்கலாமல்லவா? பாடசாலையில் ஒருசிறியகோயில். பாட ஓய்வு நேரங்களில் அங்குசென்று பீடத்தில் வைக்கப்பட்டிருந்த மாதாசுரூபத்தின் முன் முழந்தாளிலிருந்து மாலைமாலையாகக் கண்ணீர்வடிப்பாள். அவளுடையமனப்பாரம் இப்படிக் கண்ணீராக வெளிப்படாவிடின் அப்பழு அவள் உயிரையே நசித்திருக்கும். இவ்வாறு காலச்சக்கரம் சுழன்று கொண்டிருந்தது. சோதிநாதன் [illegible]டந்துக்கு ஒருமுறையோ, இருமுறையோ லீவில் மாமன்வீட்டுக்கு வருவான். செங்கமலம் சத்தியவதியைப் படுத்தும்பாடுகளை அவதானித்து மனம்உருகுவான். "ஐயோ, பாவம்! தாயில்லாப்பெண். என் மாமிமட்டும் இருந்தால்..." என்று இரங்குவான்.

சோதிநாதன் இயற்கையிலேயே இளகியஉள்ளம் படைத்தவன். அன்பு, ஆதரவு, இரக்கம்என்பன அவனுடன் பிறந்தகுணங்கள். தனக்குச் செய்த தினையளவுஉதவியையும் பனையளவாகக் கொள்ளும் பான்மையுடையவன். பிறர்நன்மைக்காகத் தன் சுகத்தையும் விட்டுக்கொடுக்கும் இயல்புள்ளவன். ஆயினும் இளமைமுதலே தகுந்த பாதுகாவலில் வளராதபடியாலும், வாலிப தோழரின் சகவாசத்தாலும் கடவுள் பக்தியையும், வேதவிசுவாசத்தையும் இழந்துபோயினன். கடன்திருநாள்—ஞாயிற்றுக்கிழமை அநுசாரங்களை அறவேகைநெகிழ்ந்தான். பாவசங்கீர்த்தனம்பண்ணிப் பலவருடங்களாயின. செபதபங்கள் கேலிக்கிடமான மீசேஷ்டைகளாயின. வாலிபஉள்ளக்கிளர்ச்சிகளை அருட்டித்தூண்டும் கட்டுரைகளும், சஞ்சிகைகளும் அவனுள்ளத்தை உலகமயமாக்கிவிட்டன. புரட்சிநூல்களும், பொதுவுடைமைப் புத்தகங்களும் கடவுள்நம்பிக்கையை அவனுள்ளத்திலிருந்து அகற்றிவிட்டன. சர்வகலாசாலைப் படிப்பைத் தன் 20-வது வயசில் முடித்துப் B. A. பட்டதாரியாகி, அடுத்தவருடமே சி. சி. எஸ். சோதனையிலும் சித்திஅடைந்தான். இப்பொழுது அவனுக்குவயசு இருபத்தெட்டு.

ஆசிரியர்
எஸ். தம்பு ஞானப்பிரகாசம்,
இளவாலை.

சோதிநாதன் சி. சி. எஸ். ஆனதின்பின் மிகச்சில தடவைகள்மட்டும் மாமன்வீட்டுக்கு வந்திருக்கிறான். அப்பொழுதெல்லாம் அவன் சத்தியவதியின் கஷ்டங்களையும், இன்னல்களையும் கண்டு மனமுருகியிருக்கிறான். "தாயில்லாப்பிள்ளையை இவ்வாறு துன்பப்படுத்தலாமா?" என்று செங்கமலத்தையோ அல்லது மாமனாரையோ கேட்டுவிட்டால் என்னஎன்று ஒருகணம் யோசிப்பான். அது வீண் அபவாதத்துக்கு இடமாகுமேயென அடுத்தகணமே அந்த யோசனையைக் கைவிடுவான். "பாவம்" என்று இரங்குவதைத்தவிர அவனால் ஒன்றும் செய்யமுடியாதிருந்தது. ஆனால், அவனையிட்டுச் சத்தியவதியும் இரங்குவதை அவன் அறிந்துகொள்ளவில்லை. அவன்மனதில் கடவுள் எண்ணம்—தெய்வசிந்தை வேரறுக்கப்பட்டிருப்பதை அவன்நடமாட்டத்திலிருந்து அவள்அறிந்துகொண்டாள். வேத அநுசாரங்களை அவன்முற்றாகக் கைநெகிழ்ந்திருப்பதைக் கண்ட அவள் மனம் நெருப்பில்விழுந்த புழுவாய்த் துடித்தது. "ஐயோ, தாயே! என் அத்தானிலிருந்து தெய்வமணம் கழன்றுவிட்டதே! அவர் சேவைகள் எங்ஙனம் உருப்பெறமுடியும்?" என்று மனம்விட்டழுதாள். "திவ்வியபாலா! நான் பிறந்தநாட்தொட்டு இற்றைவரை சுகமென்பதை அறியேன். உபத்திரவங்களும், துன்பங்களுமே என் பொக்ஷங்களாய் இருக்கின்றன. இப்புதையலை எனது அத்தானின் மனந்திரும்புதலுக்காக உமக்கு ஒப்படைக்கின்றேன். உலகஆறுதல் அறியாதஎனக்கு இந்தத் தேவ ஆறுதலையாவது என்மேலிரங்கி அளித்தருளும்" என்று திவ்வியபாலனைப்பார்த்து மனமுருகி மன்றாடினாள்.

சென்ற ஈஸ்றர்விடுமுறையிற்தான் சோதிநாதன் கடைசியாக மாமன்வீட்டுக்கு வந்தது. சத்தியவதி புஷ்பவதியானதைச்சாட்டாகக்கொண்டு 14-வது வயதிலேயே அவளின் பாடசாலைச் [illegible]விட்டது. படிப்பு முடிந்து இப்போது நான்குவருடங்களாகின்றன. அப்போது சோதிநாதன் ஓரிரண்டுநாட்கள் தங்கிவிட்டுச் சத்தியவதியின் துன்பங்களைக் கண்கொண்டுபார்க்கச் சகியாதவனாகிக் கொழும்புக்குத் திரும்பிவிட்டான். அன்றுதொட்டுச் சோதிநாதனின்மனதில் ஒரேபோராட்டம். "ஏய், சோதிநாதா! உன் தாய் உன்னை அநாதையாய் விட்டுப்பிரிய, அன்னையின்பிரிவு தெரியாமல் உன்னைப் பேணிவளர்த்தாளே உன்மாமி. அவள் விட்டுச்சென்ற செல்வக்களஞ்சியம் இன்று இவ்வளவு இன்னற்படும்போது அதற்கு நீ கைகொடுக்கவேண்டாமா?"

"ஆம். அவள் அன்பாதரவில் நான் வளர்ந்தது மெய்தான். ஆனால், இப்பொழுது நான் ஒரு சி. சி. எஸ். சத்தியவதியை என்மனைவியாக்கிக்கொண்டால் அது என் கௌரவத்திற்குப் பொருந்துமா? ஒரு சி. சி. எஸ். மனைவிஎன்றால் அதற்கேற்றபடிப்பு—நாகரீகம்—நிலைபரம் வேண்டாமா?

"சத்தியவதிஎன்ன அழகிற்குறைந்தவளா? அவள்தான் எழுத, வாசிக்கப் படித்திருக்கிறாளே! அதற்குமேல் என்ன படிப்பு வேண்டியிருக்கிறது பெண்களுக்கு? நாகரீகஉலகில் நாலுநாள் உலாவிவிட்டால் தானேஒட்டிப் பிடித்துக்கொள்ளுகிறது நாகரீகம்!"

"சே! சிவிலுத்தியோகஸ்தன் சோதிநாதனின் திருக்கடாட்சத்திற்காகத் தனம்படைத்த திலோத்தமைகள்பலர் தவங்கிடக்கும்போது இந்தப் பட்டிக்காட்டுச் சத்தியவதியைக் கட்டிக்கொள்ளச் சோதிநாதனுக்கென்ன பித்தமாபிடித்திருக்கிறது?"

"ஐயோ! சோதிநாதனின் இந்த நிலைபரத்துக்குக் காரணம் சத்தியவதியின் தாய்தானே. அதில் எள்ளளவும் ஆட்சேபமேயில்லை! அவள் உதவிக்கு மாற்றுதவிசெய்ய வேண்டியது சோதிநாதனின் கடமையில்லையா"?

"கடமையாவது, கத்தரிக்காயாவது! ஓர்செல்வ அழகுராணியை மணந்துகொண்டு ஆனந்தநர்த்தனம் புரிவதைவிட்டு, இந்தஅடிமையைக் கட்டிக்கொண்டு அழவேண்டிய அவசியமென்ன?"

இச்சிந்தனைகள் சோதிநாதன் மனதில் மாறிமாறிப் போராடிக்கொண்டிருந்தன. கடைசியாகச் சென்ற கிழமைதான் "சத்தியவதியைத் தன் துணைவியாக்கிக் கொள்வது" என்ற முடிபுக்குவந்தான். தன் முடிபை உடனே தபால்மூலம் அவளுக்கு அறிவித்திருந்தான்.

சத்தியவதியின்கடிதத்தை வாசித்த சோதிநாதனுக்கு எதுவுமேபுரியவில்லை. "பேதைப்பெண்! என்காதலினும் மேலானதொன்றை என்னிடம் எதிர்பார்க்கின்றாளாம். இதுஎனக்குப் புதிராம். ஐயோபாவம்! மிதமிஞ்சிய துன்ப உபத்திரவங்களினால் சித்தப்பிரமை அடைந்துவிட்டாள்போலும். இவ்வளவுதான் என்மாமி கொடுத்துவைத்தது" என்று பெருமூச்சு விட்டான். "எதற்கும்கடைசியாக இந்தக்கிறிஸ்மஸ் விடுமுறையைச் சாட்டாகக்கொண்டு அவளைப் பார்த்துவருவோம்" என்று புறப்பட்டான்.

24-ந் திகதி சாயந்தரம் 5மணிபோல் சோதிநாதன் மாமன்வீடு வந்துசேர்ந்தான். செங்கமலமும், மாமனும் அவனை வரவேற்றனர். ஆசாரத்துக்காகக் குசலம் விஞவிக்கொண்டான். செங்கமலத்துக்கும் மாமனுக்கும் ஏதோநத்தார்ப்பரிசுகள் கொடுத்தான். சிறிது நேரம் சிரமபரிகாரம் செய்துகொண்டதின்பின் இரவு போசனம்முடித்துக்கொண்டு படுக்கைக்குச் சென்றான். மாமனும்செங்கமலமும் நத்தார்ச் சாமப்பூசைக்காகக் கோவிலுக்குக்கிளம்பினர். "சத்தியவதி! விடிந்தால்நத்தார். அரியதரத்தைச் சீக்கரம் சுட்டுமுடித்துவிட்டுப் பாத்திரங்களைத் துலக்கிவை"

( தொடர்ச்சி 3-ம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா ஞானஒடுக்கம்

பருத்தித்துறை விசாரணைப்பங்கில் 11-11-51 ஞாயிறு தொடக்கம் 25-11-51 ஞாயிறுவரையிலே 15 தினங்களாக மகாஞானஒடுக்கம் ஒன்று வண. L. J. அகஸ்ரீன் சுவாமியவர்களாலும், Z. N. குரூஸ் சுவாமியவர்களாலும் பெரிதும் மனவருட்சிக்குரியவிதமாகப் போதிக்கப்படலாயிற்று. அதுபற்றியவிபரம் வருமாறு :

## ஞானஒடுக்க ஆயத்தம்

ஒரு கிழமைக்கு முன்பாகவே இதற்கு ஆயத்தமாகப் பாடுபட்ட திருச்சுரூபம் கோவிலின்மத்தியில் ஸ்தாபிக்கப்படலாயிற்று. மரியாயின் சேனையாளர் எல்லாரும் பருத்தித்துறை விசாரணைப்பங்கின் மூலைமுடுக்குகள் எங்கும்சென்று, இந்தமகா ஞானஒடுக்கத்திற் பங்குபற்றுமாறு மக்களுக்குப் புத்திகூறினின்றனர். மூன்று தினங்களுக்குமுன் போதககுருப்பிரசாதிகள் இருவரும் இங்குவந்து சேர்ந்தனர். சேர்ந்ததும் விசாரணைப் பங்கிலுள்ள சிலகஷ்டமான இல்லங்களைத் தரிசித்து அவற்றிலுள்ளாரை ஞானஒடுக்கத்தில் பங்குபற்றுமாறு பரிவாகக்கேட்டுக் கொண்டனர்.

## ஆரம்பதிருச்சடங்குகள்

11-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை 5 மணிக்கு ஞானஒடுக்கத்தின் ஆரம்பமாக மணிஅடிக்கவே, குருமாரும், விசுவாசிகளும் கோவிலில் கூடினார்கள். தவத்தின் அடையாளமாக ஊதாநிறக் காப்பைஅணிந்து, வண. கட்டளைக்குரவர் தமது உதவிக் குரவருடன் குருசு மெழுகுவர்த்தி முன்செல்ல "மீசறேறே" எனும் கீதம் பாடிக்கொண்டு போதககுருமாரைச் சந்திப்பான் ஆலயத்தின் பெரியவாயிலண்டை சென்றார். போதககுரவரான பெரியசுவாமியார் தமது துணைவருடன் வாயிலில் முழந்தாட்படியிட்டிருக்க, கட்டளைக்குரவர் நான்குஅடி உயரமான பாடுபட்டசுரூபமொன்றை அவரிடம் கையளித்தனர். அவர் அதனை முத்தமிட்டு இருகரங்களாலும் ஏந்திஉயர்த்தித் தமது துணைவருக்கும் முத்தமிடக் கொடுத்தனர். பின்னர் எல்லோரும் சுற்றுப்பிரகாரமாகத் தேவமாதாவின் பிரார்த்தனை பாடிக்கொண்டு கோவிலுள் பிரவேசித்தபின் குருப்பிரசாதிகள் பீடத்தை அடைந்ததும், பெரிய சுவாமியார் தமது காத்திருந்த பாடுபட்ட திருச்சுரூபத்தினால் யாவரையும் ஆசீர்வதித்தார். அதன்மேல்கட்டளைக்குரவர் "இஸ்பிரீத்து சாந்துவே" என்ற கீதத்தைப்பாடஆரம்பிக்க, எல்லோரும் அதைப்பாடி முடித்ததும், அவர் பீடத்திலேறிப் போதகர்களை எதிர்கொண்டு நிற்க, பெரியசுவாமியார் துணைவருடன் முழந்தாளிலிருந்து அவரது ஆசீர்வாதத்தைவேண்டிநின்றார். அவரும் சர்வேசுரன் உங்கள் வாயிலும், இருதயத்திலுமிருந்து தேவவார்த்தைகளைப் போதிக்க உங்களைத் தகுதியுடையோர் ஆக்குவாராக என்று ஆசீர்வதித்தார். பின்னர் பெரியசுவாமியார் பிரசங்க மேடைசென்று ஞானஒடுக்க ஒழுங்கு முறைகளைச் சகலர்க்கும் அறிவித்ததும் துணைக்குரவரால் அருட்சிக்குரிய ஆரம்பபிரசங்கஞ் செய்யப்பட்டது.

## பிள்ளைகள்தினம்

17-ந்தேதி சனிக்கிழமை பிள்ளைகள் தினம். முதல்நாள் எல்லாப்பிள்ளைகளும் பாவசங்கீர்த்தனஞ்செய்து ஆயத்தமாயிருந்தமையால் சனிக்கிழமை காலை எல்லாரும் திவ்வியபூசை கண்டு, திருவிருந்து அருந்தினார்கள். பூசையின்பின் அவர்களின் கடமைகளைப்பற்றி ஒருசிறுபுத்திபோதனையும், செபமாலையில் ஒருகாரணிக்கமும், தேவமாதாவின் பிரார்த்தனையும் சொல்லப்பட்டன. அதன்மேல் தேவமாதாவுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுப்பதின்கருத்து விளக்கப்பட்டு, நேர்த்தியாக அலங்கரித்திருந்த தேவதாயாரது பீடத்தின்முன் தூயவெள்ளை உடைகள் அணிந்து, எரியும்மெழுகுவர்த்திகளைக் கையிலேந்திநின்ற பிள்ளைகள் எல்லோரும் மாதாவுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள். அவர்களின் ஞானஸ்நான வாக்குத்தத்தங்களும் புதுப்பிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து 19-ந்தேதி திங்கட்கிழமை மரித்தோர் தினமாக அனுசரிக்கப்பட்டது. அன்று காலை இவ் விசாரணைப் பங்கைச்சேர்ந்தவர்களாய் மரித்துப்போன விசுவாசிகளின் ஆத்துமஇளைப்பாற்றிக்காகத் துக்கப்பாடற்பூசை நிறைவேறியது. பூசையின்போது உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களைப்பற்றியும், அவர்கள்மட்டில் நமக்குள்ள கடமைகளைப்பற்றியும் ஓர்அரிய பிரசங்கஞ் செய்யப்பட்டது.



## பச்சாத்தாபச் சுற்றுப்பிரகாரம்

20-ந்தேதி செவ்வாய்க்கிழமை பின்னேரம் யூபிலிவருடப்பலனை அடையும்படியாகப பச்சாத்தாபச் சுற்றுப்பிரகாரம் ஒன்று நடைபெற்றது. குருசு, மெழுகுவர்த்தியைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களும், ஸ்திரீகளும் முன்னேசெல்ல, வண. G. T. பாலசுந்தரம் சுவாமியவர்கள் நமது ஆண்டவரின் பாவனையாக ஓர் பாரச்சிலுவையைத் தோளிற்சுமந்துசெல்ல, ஆடவர்கள் பின்னேசெல்ல, ஒலிபரப்பிபூட்டிய ரதத்திலிருந்து வண. குரூஸ் சுவாமியவர்கள் சங்கீதங்கள்பாடிச் செபமாலை சொல்ல, அவரைத் தொடர்ந்து மக்கள் எல்லாம் ஒரேசத்தமாய்ச் சங்கீதங்கள் பாடிச் செபமாலைசொல்லிப் பச்சாத்தாப மேலீட்டினால் கண்ணீர்சிந்திய வண்ணம் கலட்டி, தும்பளைக் கோவில்களைச் சந்தித்துக்கொண்டு மீண்டார்கள். பின்னர் திருச்சிலுவைகொண்டு ஆசீர்வாதம் அருளப்பட்டது.

## தேவநற்கருணைத்தினம்

22-ந்தேதி வியாழக்கிழமை தேவநற்கருணைத்தினம். அன்று பன்னூற்றுக் கணக்கான ஆடவர்களும், பெண்களும் திருவிருந்தருந்தினர். பூசைமுடிவில் தேவநற்கருணை எழுந்தேற்றம்பண்ணி வைக்கப்பட்டது. நாள்முழுவதும் நிந்தைப்பரிகார ஆராதனை நடைபெற்றது. பாடசாலை மாணவர்களும், பக்திக்கூட்டங்களைச் சேர்ந்தவர்களும் மாறிமாறி நற்கருணைநாதரைச்சந்தித்து அவருக்கு நிந்தைப்பரிகாரம் செய்தார்கள். பிற்பகல் 4-30 மணிக்குத் திருமணிச்சியாலம் ஆரம்பமானது. அதன் முடிவில் வண. கட்டளைக்குரவரால் நற்கருணைநாதர் ஆலயத்தின் மத்தியபாகத்தினூடாகச் சுற்றுப்பிரகாரமாய்க் கொண்டுசெல்லப்பெற்றனர். அத்தருணம் "தயவாயிரும் சுவாமீ" என்ற சங்கீதம் சகலராலும் மனவுருக்கமாகப் பாடப்பட்டது.

## உபவாசதினம்

23-ந்தேதி வெள்ளிக்கிழமை ஞானஒடுக்கத்தின் நோக்கங்களுக்காகவும், விசேஷமாய் இன்னமும் மனந்திரும்பாத பாவிகள் மனந்திரும்ப வேண்டுமென்ற கருத்திற்காகவும் எல்லாரும் ஒருசந்திகாக்க வேண்டுமென்று பெரிய சுவாமியார் கேட்டுக்கொண்டதற்கிணங்க, எல்லாரும் ஒருசந்தி அனுசரித்துப் பாவிகளுக்காகச் செபங்கள் செய்து ஒப்புக்கொடுத்தார்கள். அன்று மாலை பெரியசிலுவைப்பாதையும் ஆசீர்வாதமும் நடைபெற்றன.

## பெற்றோர்தினம்

24-ந்தேதி சனிக்கிழமை தாய்தந்தையருக்காகப் பாடற்பூசை நிறைவேறியது. ஏராளமானோர் திவ்வியநன்மை பெற்றனர். தாய்மாருக்கென வேறாகவும், தகப்பன்மாருக்கென வேறாகவும் இருபோதகங்கள் செய்யப்பட்டன. சாயந்தரம் ஆசீர்வாதத்தின்போது கலியாணவார்த்தைப்பாடுகள் புதுப்பிக்கப்பட்டன. பின்னர் விசாரணைப்பங்கு முழுவதும் தேவதாயாருக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது. எரிகின்ற மெழுகுவர்த்திகளைக் கையிலேந்தி மக்கள்எல்லோரும் முழந்தாளில்இருக்க, பெரிய சுவாமியார் தேவமாதாவின் பாதம் பணிந்து, கட்டளைக்குரவரையும், உதவிக்குரவரையும், பாடசாலை ஆசிரியர்களையும், மாணவர்களையும், வாலிபரையும், கன்னியர்களையும், ஸ்திரீகளையும், புருஷர்களையும், சிறுவர்களையும், சிறுமியர்களையும், வயோதிபரையும், நோயாளரையும், பால்மணம்மாறாப் பச்சிளம் குழந்தைகளையும் தனித்தனியே மாதாவின் திருப்பாதங்களிலே காணிக்கையாக வைத்தனர். அத்தருணம் எல்லாரும் பக்திப்பரவசத்தினால் கண்ணீர் சொரிந்து மாதாவின் அருளை மன்றாடி நின்றனர்.

முடிவு :— 25-ந்தேதி ஞாயிறுவாரம் பூசையின்பின் ஞானஸ்நான வாக்குத்தத்தங்கள் புதுப்பிக்கப்பட்டன. அன்று பிற்பகல் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின், ஞானஒடுக்ககாரருக்கெனப் பாப்பாண்டவர் அருளிய பரிபூரணபலன் ஆசீர்வாதம அருளப்பட்டு ஞானஒடுக்கம் முற்றுப்பெறலாயிற்று. பிந்தஎல்லோரும் நன்றியறிந்த மனத்தினராய்ப் போதககுரவர்களைச் சந்தித்துத் தெட்சணைவைத்துப் பணிந்து, அவர்களின் ஆசீர்வாதம் கேட்டு நின்றனர். அவர்களும் மக்களின் நன் மனதைப் பாராட்டி, மரியாயின் சேனையாளரின் முயற்சிகளைப் புகழ்ந்து ஆசி வழங்கினார்கள். சுபம். — நிருபர்.

# "ஒளி பிறந்தது"

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றுகட்டளைபண்ணிவிட்டுச் சென்றாள் செங்கமலம். சோதிநாதனுக்குத் தூக்கம்வரவில்லை. இரவு பத்துமணி இருக்கும். மெதுவாகஎழுந்து சத்தியவதியின் அறைப்பக்கம் சென்றான். அறை திறந்திருந்தது. உள்ளே ஒருசிறு பாலன்சுரூபமும், அதன் இருமருங்கிலும் எரிகின்ற இருமெழுகுவர்த்திகளும் இருந்தன. சத்தியவதியைக் காணவில்லை. அடுக்களைப்பக்கம் எண்ணெய்ச் சலசலப்புக் கேட்டது. "ஓ! ஹோ!! அடிமைக்கு இன்னும் ஒழியவில்லை. பாவம்" என்று மனத்துட்சொல்லிக்கொண்டே உற்றுநோக்கியபோது பாலனின் சுரூபத்தின்முன்னால் ஒருகடிதம் வைக்கப்பட்டிருக்கக் கண்டான். "ஏதுகடிதம்" என்றுமெதுவாகக் கடிதத்தைப் பிரித்தான். "மனிதஇரட்சிப்புக்காக இன்ப மோட்சம்விட்டுத் துன்பஉலகில்பிறந்த திவ்வியபாலா! இதோ! என்னுடைய துன்பங்களையும், இன்னல் இக்கட்டுகளையும், என் இன்ப சீவியத்தையுமே என் அத்தானின் மனந்திரும்புதலுக்காக ஒப்புக்கொடுக்கிறேன். என் அத்தான் சோதிநாதனின்காதலை நான்ஏற்றுக்கொள்வதினால் என்வாழ்வு புத்துயிர்பெறும். இன்பசுகம் என்னைவந்தடையும். ஆனந்தப்படகில் நான்நீந்த முடியும். ஆகிலும் இச்சுகபோகம் யாவற்றையும் அவரின்மனந்திரும்புதலுக்காக உமக்குக்கையளிக்கிறேன். நான்பொறுமையுடன் அனுபவிக்கும் துன்பவாழ்வும், என் காதற்பலியும் வீண்போகாவென்பது என்நம்பிக்கை. திவ்வியபாலா! என்காணிக்கையைக் கையேற்றுக்கொண்டு என் அத்தானின்உள்ளத்தில் ஒளிபிறக்கச் செய்தருளும்" என்று அதிலேவரையப்பட்டிருந்தது. கடிதத்தைமடித்து இருந்த இடத்தில் வைத்தான். அதேஇடத்தில் ஸ்தம்பித்தவனாய் எவ்வளவுநேரம் நின்றானோதெரியவில்லை. "யார், அத்தானா?" என்றசத்தம்கேட்டுத் திரும்பிப்பார்த்தான். "ஆமாம் சத்தியவதி. உனக்கு இந்தஇரவில் தனியேஇருக்கப் பயமில்லையா?" என்றுகேட்டான் சோதிநாதன். "இல்லை, அத்தான். இது எனக்குப் பழக்கம். இன்றைக்குத்தான் நீங்கள்வீட்டில் நிற்கிறீர்களே" என்றுவிடையளித்தாள் சத்தியவதி. "நானும்தான் கோயிலுக்குப் போகிறேனே! புதுமனிதனாகத் திரும்பி வருவேனென்று உனக்கு வாக்குறுதி அளிக்கிறேன் சத்தியவதி. இதுதான் உனக்கு நான்கொடுக்கும் நத்தார்ப் பரிசு" என்றான்சோதிநாதன். "புதிர் புரிகிறதா அத்தான்" என்றாள் சத்தியவதி. "தடையென்ன? பத்திரமாயிருந்துகொள். கோயிலுக்குப் போய் வருகிறேன்" என்றுசொல்லிவிட்டுச் சோதிநாதன் புறப்பட்டுச்சென்றான். பலவருடங்களுக்குப்பின் தன் மனதைத்திறந்து நல்லபாவசங்கீர்த்தனம் பண்ணினான். மிகுந்த மனஅருட்சியுடன் திருவிருந்துப பந்தியிலும்அமர்ந்தான். அவன்உள்ளத்தில் பிறந்தஒளி சுடர்விட்டுப் பிரகாசித்தது. மனஅமரிக்கையுடன் வீடுசென்று படுத்துக் கொண்டான்.

அடுத்தநாள் நத்தார்விழா வெகு பரிமளிப்பாய்க் கொண்டாடப்பட்டது. சாயந்தரம் சோதிநாதன் பயணம்புறப்பட்டான். சத்தியவதி தனித்துநிற்கும் தருணம்பார்த்து "போய்வருகிறேன் சத்தியவதி" என்று பயணம்கூறினான். "அத்தான், இது என் வழக்கமான கண்ணீரல்ல. ஆனந்தக்கண்ணீர். சுகமே போய்வாருங்கள்" என்று கண்ணீரோடு கைகூப்பி வழிவிட்டாள். "கடிதம்எழுதுகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான் சோதிநாதன்.

சிலநாட்கள்சென்று சத்தியவதிக்கு ஒருகடிதம்கிடைத்தது. அதிலே சத்தியவதியின் காணிக்கை ஆச்சரிய வலிமை நிறைந்ததென்றும், அது தன் சீவியத்தையே முற்றாக மாற்றிவிட்டதென்றும், தான் மௌனசபை ஆச்சிரமத்தில்சேரத் தீர்மானித்திருப்பதாகவும் சோதிநாதன் எழுதியிருந்தான். சத்தியவதி அதற்குப்பதிலாகத் தன்னையும் அந்தஆச்சிரமத்தில் சேர்ப்பிக்கவேண்டிய ஒழுங்குகளைச் செய்துதரும்படி கெஞ்சிக் கேட்டிருந்தாள். சோதிநாதன் மௌனசபை ஆச்சிரமத்தில் சேர்ந்தான். அவன்செய்த ஒழுங்குப்படி சிலதினங்களுள் சத்தியவதியும் அதில் ஏற்றுக்கொள்ளப்பட்டாள்.

சுபம்!

[கதையில்வரும் பெயர்கள், சம்பவங்கள்யாவும் கற்பனை. எவரையும் குறிப்பனவல்ல.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருநாள் அட்டவணை

மார்கழிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 14 | அர்ச். ஸ்பிரிதியோன் | (வெ) |
| சனி | 15 | அர்ச். வலேரியான் | (வெ) |
| ஞா | 16 | ஆகமனகா. 3-ம்ஞாயிறு—அர்ச். எயுசேபியார் | (ஊ |
| திங் | 17 | அர்ச். தேவசகாயர் | (ஊ) |
| செ | 18 | அர்ச். கிருசியான் | (ஊ) |
| புத | 19 | அர்ச். திமொத்தேயு | (ஊ) |
| வி | 20 | அர்ச். சாமிநாதர் | (ஊ) |

சத்தியவேத
# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
மார்கழிமாதம் 13-ந்திகதி

## தமிழரும் அரசியலும்

புதிய பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நம்மை எதிர்நோக்கி வந்துகொண்டிருக்கின்றது. இலங்கையிலுள்ள பல்வேறு அரசியற்கட்சிகளும் தேர்தற்பிரசார வேலையிலும், பல்வேறுதொகுதிகளுக்கும் தத்தம் அபேட்சகர்களைத் தெரிந்துநியமிப்பதிலும் கருத்தாயிருந்து வருகின்றன. இந்தவேளை அரசியல்விஷயமாய்த் தமிழ்மக்களின் எதிர்காலநிலைமை யாதாகுமோவென்று பலருமே அங்கலாய்ப்போடும் சிந்திப்போராய்க் காணப்படுகின்றனர். சென்ற பொதுத்தேர்தலிலே அகில—இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் "தமிழன்என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்ற கோஷத்துடன் தேர்தல்பிரசாரஞ் செய்தது.

தமிழ்மக்களிடையேஇதுஓர்வித எழுச்சியை உண்டுபண்ணியது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலே தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர்களாய் நின்றோரெல்லாரும் வெற்றிமுழக்கத்துடன் பாராளுமன்றஞ்சென்றார்கள். ஆனால், இன்று அவர்களின்நிலைமை யாது? காங்கிரஸ்பிரதிநிதிகள் இருகட்சிகளாகப் பிரிந்துகொண்டார்கள். "தமிழரசுக் கட்சி" என நவமாக ஒன்று தலையெடுத்தது. "உன்நிலையை உணர்ந்தாயா தமிழா" என்று அது உரத்தகோஷஞ் செய்கின்றது. இவ்வாறாகத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியும், தமிழரசுக்கட்சியும் அடுத்தபொதுத் தேர்தலிலே போட்டியிடப்போகின்றன. இவற்றுடன் ஐக்கிய தேசியக்கட்சியும் சேர்ந்துகொண்டு தங்களிடையே மும்முரமாகப் போட்டியிட்டுத் தேர்தற்போர் நடத்துமிடத்து, ஆட்டுக்கடாச் சண்டையிலே நரி இரத்தங்குடித்தவாறாய்ச் சமசமாஜிகள்வந்து உள்ளிட்டு வெற்றிபெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம்.

இன்னும் சுயேச்சையான அபேட்சகர்களும்வெளிகிளம்பச் சந்தர்ப்பம் உண்டாகலாம். அப்போது வடமாகாணத் தொகுதிகள் ஒன்பதையும் காங்கிரஸ் கட்சி, தமிழரசுக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, சமசமாஜக்கட்சி, சுயேச்சைக்கட்சி முதலாம் பல்வேறு கட்சிகளும் பங்குபோட்டுக் கொள்ளுமானால் "உன் நிலையைஉணர்கின்றாயாதமிழா" என்று தமிழ்மக்கள் ஒவ்வொருவரையும் உணர்ச்சி ததும்பக் கேட்கின்றோம். அப்போது "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே" என்ற உயரிய சுலோகம் தமிழ்மக்கள்பால் செல்லுமா? தெரிவுசெய்யப்படும்ஒன்பது பிரதிநிதிகளும் பலகட்சிகளிலும் பங்குபோடப்படுமிடத்து ஒற்றுமை எங்கே உண்டாகப் போகிறது? வாழ்வு எங்ஙனம் உண்டாகப்போகிறது?

பத்து எருதுகள் ஒன்றுகூடிப் பலங்கொண்டு நின்றபோது சிங்கம் பயந்து பின்வாங்கியது. ஆனால், பத்தும் தங்களுள் பிரிந்து தனித்துக்கொண்டபோது சிங்கத்தின்பாடு வாய்ப்பாகிவிட்டது. அவ்வாறே தமிழர்களும் கட்சிகட்சியாகப் பிரிந்து, தங்களுள் பிளவுபட்டும் கொள்கைகளில் வேற்றுமைப் பட்டும் நிற்கும்போது "உன் கதியை உணர்கின்றாயா தமிழா" என்று தமிழ்மக்கள் ஒவ்வொருவரையும் உய்த்துணருமாறு கேட்கின்றோம். இவைகளையெல்லாம் சிந்திக்கும்போது தமிழரின் வருகால அரசியல்நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறதென்பது நன்கு தெளிவாகின்றது. இன்றுதமிழ்மக்களிடையே தலைவர்களாகத் தோன்றியுள்ளவர்கள் தத்தம் மனப்போக்கின்படியெல்லாம் அவர்களை ஒன்றுக்கொன்று முரண்பாடான வழிகளில் இட்டுச்செல்லும்போது "உன் நிலையை உணருகின்றாயா தமிழா?" என்று தமிழ்மக்கள் ஒவ்வொருவரையும் விளித்துக்கேட்கின்றோம்.

## சுதேச வர்த்தமானம்

### பாலனின் நவதினஉற்சவம்

திவ்விய பாலனின் பிறப்புக்கு ஆயத்தமான நவதின உற்சவம் 16-ந்திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது. இதைத் தகுந்த விதமாய்க் கொண்டாடுவதற்கும், திவ்விய பாலனின் பிறப்பினால் வரக்கூடிய பெருநன்மையை அடைவதற்கும் "நவதினஉற்சவம்" எனும் புத்தகம் பெரிதும் உபயோகமுள்ளது. இப்புத்தகத்தைப்பற்றிய விளம்பரம் பாதுகாவலினிலே மூன்றுவாரங்களாக வெளிவந்துள்ளது. காலநேரம் இருக்கும் இவ்வேளையிலாவது ஒவ்வோர் குடும்பமும் ஒவ்வோர் பிரதி வாங்கி வீடுகளிலே பொதுவில் இந்த நவநாளைச் செய்தால் இவ்வருட நத்தார்த்திருநாள் மிகுந்தபலனை அளிப்பதாகும்.

### சிறுகதைப்போட்டி

பாதுகாவலன் "கிறிஸ்மஸ் விழாச்சிறுகதைப்போட்டி"யில் முதலாவது பரிசில்பெற்ற சிறுகதை இற்றைப்பிரசுரத்திலே "ஒளி பிறந்தது" எனும் தலையங்கத்துடன் இரண்டாம் பக்கத்தில் வெளிவருகின்றது. இதனைஎழுதி முதற்பரிசில் பெற்றுள்ள இளவாலை,ஆசிரியர் திரு. எஸ். தம்பு ஞானப்பிரகாசம் அவர்களுக்கு நம்வாழ்த்து உரித்தாகுக!

### வின்சென்ற்டீபோல்சபை

யாழப்பாணம், சென் வின்சென்ற்டீபோல் சபைப் பந்திகளின் மூன்றாவது கால்வருடப் பொதுக்கூட்டம் 16-ந் திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு அர்ச். ரூசையப்பர் பந்திச் சாலையில் நடந்தேறும். பந்திகளின் அங்கத்தவர்களும், அபிமானிகளும் அவ்வேளை சமுகந்தருமாறு கேட்கப்படுகின்றார்கள்.

### சாதனபாடசாலை—

கொழும்புத்துறை

இப்பாடசாலையின் நத்தார் விடுமுறை சென்ற 7-ந் திகதி ஆரம்பமாகியிருக்கிறது. பாடசாலை மறுபடி வருகிறதைமாதம் 7-ந்திகதி ஆரம்பமாகும். இதிலே ஆரம்ப, கனிஷ்ட, சிரேஷ்ட வகுப்புகளில் சேர்ந்து படிக்க விரும்பும் மாணவர்கள் வருகிற தைமாதம் 6-ந் திகதிக்குமுன் அதிபர் அவர்களுக்கு மனுப் பண்ணுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

### உள்நாட்டுவிமானசேவை

அடுத்தவருட ஆரம்பத்திலே ஆகாயவிமானப் பயிற்சிக்கழகம் இலங்கையில் நாளாந்த ஆகாயப்பிரயாணசேவை நடத்தவிருக்கிறது. இரத்மலானையிலிருந்து கொக்கலை, அம்பாறை, மின்னேரி, திரிகோணமலை,காங்கேசன்துறைக்கு விமானங்கள் தினமும் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும். பிந்தத்தற்போது பாவனையில் இல்லாத புத்தளம், வவுனியா எனுமிடங்களுக்கும் ஆகாயப்பிரயாணசேவை நடைபெறுமென நம்பப்படுகிறது.

### தேங்காய்ஏற்றுமதித்தீர்வை

பாவனையாளருக்கு மலிவாயும், ஏராளமாயும் கிடைக்கத்தக்கதாக இலங்கையிலிருந்துவெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படும் தேங்காய்களின் ஏற்றுமதித் தீர்வை சென்ற ஞாயிறு முதல் ஆயிரத்துக்கு 42 ரூபா 50 சதத்திலிருந்து 79 ரூபா 50 சதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இன்னும் ஏற்றுமதியாகும் கொப்பறாவின் தீர்வை தொன்ஒன்றுக்கு 400 ரூபாவிலிருந்து 317 ரூபாவாகவும், தேங்காயெண்ணெயின் தீர்வை 325 ரூபாவிலிருந்து 285 ரூபா 50 சதமாகவும் தேங்காய்ப்பூவின் தீர்வை 224-ரூபாவிலிருந்து 222 ரூபாவாகவும் குறைக்கப்பட்டிருக்கின்றன.

### செனற்சபைத்தலைவர்

செனற்சபையின் தலைவராகச் சேர்,ஜெறூட் விஜயக்கூன் அவர்கள் திரும்பவும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பெற்றிருக்கின்றார். உபதலைவராகச் சேர். பிறாங் குணசேகர அவர்கள் தெரிவுசெய்யப்பெற்றுள்ளனர்.

### இளவரசியின் விஜயம்

எலிசபேத்இளவரசியும், எடின்பறோகோமகனும் இலங்கைக்கு விஜயஞ்செய்வது சம்பந்தமாய்ச் சித்தஞ் செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சி ஒழுங்குமுறையை இருவரும் ஒப்புக்கொண்டுள்ளனர். அதன்படி அவர்கள் வருகிற மாசிமாதம் 14-ந்திகதி காலை கொழும்புவந்து சேரும்பொழுது துறைமுகப்பாலத்திலே அவர்களுக்கு ஓர் வரவேற்புபசாரம் அளிக்கப்படும்.

### நகருக்குக்குழாய்த்தண்ணீர்

யாழ்ப்பாணப் பட்டணத்துக்குக் குழாய்மூலம் நல்லகுடிதண்ணீர் உதவும் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் தன்னால் இயன்றதெல்லாம் செய்யுமென்று தலதாபனமந்திரியார் என்றமுறையிலே பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்கள் யாழ்ப்பாண நகரசபைக் கம்மிஷனருக்குத் தெரிவித்திருக்கின்றார். ஆனால் நகரசபையும் யாழ்ப்பாண மக்களும் ஏகமனதாக இத்திட்டத்தை ஏற்றால்தான் மத்தியஅரசாங்கம் முன்வந்து அதற்கு வேண்டிய நிதியை வழங்குமென்ற நிபந்தனையையும் அவர் விதித்திருக்கின்றார்.

### பெண் றெஜிஸ்திறர்கள்

கிராமப்பகுதிகளிலே பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுகாரர் அதாவது றெஜிஸ்திறார்களாக நியமிக்கப்படுவதற்குஆண்களைப் போலவே பெண்களும் இனிமேல் தகுதியுடையவர்களென்று உள்நாட்டுமந்திரியார் சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இதுகாலவரை இப்பதவிக்குப்பெண்கள் அனுப்பிய மனுக்கள் நிராகரிக்கப் பட்டுவந்தன.

***********************

## சந்தாதாரருக்கு ஓர் வேண்டுகோள்

"சத்தியவேதபாதுகாவலன்" சந்தாதாரருக்கு 1951-ம் ஆண்டு முடிகிறவரையிலே அவரவர் நிலுவைப் பணத்தைப் பற்றிய அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்தும் சிலர் அதைப்பற்றி இன்னுமேகவனியாமல் இருந்து வருகின்றனர். இவர்கள் தங்கள் நிலுவைப்பணத்தைத் தாமதமில்லாது அனுப்பிவைக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். 1952-ம் ஆண்டுச் சந்தாப்பணத்தையும் அடுத்த பங்குனிமாதம் 31-ந் திகதிக்குமுன் அனுப்பிவைக்குமாறு எல்லோரும் கேட்கப்படுகின்றார்கள். பணம் அனுப்பும்போது தங்கள் சந்தா நம்பரையும் குறித்து அனுப்புக.

***********************

## தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலைகளின் முதலாந் தவணை **8-1-1952**-இல் ஆரம்பமாகும. பாடசாலைத் தவணைகளும், பகிரங்கவிடுமுறைநாட்களும் பின்பு பிரசுரிக்கப்படும்.

1952-ம் ஆண்டு தத்தம் பாடசாலைகளில் அனுசரிக்கப்படவிருக்கும் விசேஷ விடுமுறை நாட்களை நமக்குத் தெரிவிக்கும்படி தலைமை ஆசிரியர் எல்லோருங் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

N.B. கொழும்புத்துறைத் தாபனத்தில் வழமையாக மார்கழிமாதம் நடைபெறும். ஆசிரியரின் ஞானவொடுக்கம் வருகிற சித்திரைமாதத்துக்குப் பின்போடப்பட்டிருக்கிறது.

**T. A. J. Mathuranayagam**
*Gen. Manager, R. C. Schools.*
Jaffna 4-12-51.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பத்திரிசியார் கல்லூரி

# கீழ்ப்பாடசாலை—1952.

மேற்படி கல்லூரியின் கீழ்ப்பாடசாலையில் 1952-ம் ஆண்டு 4-ம் வகுப்பிற் சேர இருக்கும் பிள்ளைகள் 1952-ம் ஆண்டு தைமாசம் 12-ந் திகதி சனிக்கிழமைகாலை 9 மணிக்கு நடக்க இருக்கும் பிரவேசப் பரீட்சைஎடுக்கவேண்டும்.

இப்பரீட்சைக்குத் தேவையான மாதிரிப் பத்திரம் கீழ்ப்பாடசாலையின் வண. தலைவர் சுவாமியிடம் பெற்றுக்கொள்ளலாம். இம்மாதிரிப் பத்திரத்தை முறையாக நிரப்பி மாணவனின் ஞானஸ்நானப் பத்திரத்துடனும் 3-ம் வகுப்பில் அரங்கேறிய பாடசாலை விடுகைப்பத்திரத்துடனும் தலைவர் சுவாமிக்கு 1952-ம் ஆண்டு தைமாசம் 7-ந் திகதி திங்கட்கிழமைக்குமுன் அனுப்பி வைக்கவேண்டும்.

13 பெற்றூர்கள் தங்கள் பிள்ளைகளின் விண்ணப்பப்பத்திரங்களை ஏற்கனவே அனுப்பி இருக்கிறூர்கள். அவர்களுள் சிலர் ஞானஸ்நானப்பத்திரமும், வேறு சிலர் பாடசாலை விடுகைப் பத்திரமும் இன்னும் அனுப்பிவைக்கவில்லை. அவர்களும் தைமாசம் 7-ந் திகதிக்குமுன் அனுப்ப வேண்டிய பத்திரங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

4-ம் வகுப்பில் சேர வரும் மாணவன் 1941-ம் ஆண்டு தை மாசத்துக்குப்பின் பிறந்தவனுயும் தமிழில் 3-ம் வகுப்பு அரங்கேறியவனுயும் இருக்கவேண்டும். பிரவேசப்பரீட்சைக்கு 2 ரூபா தை மாசம் 12-ம் திகதி காலை கட்டவேணும்.

**கவனிப்பு:** (1) 4-ம் 5-ம் வகுப்புப் பிள்ளைகளின் ஆங்கில உச்சரிப்பு, சம்பாஷணை முதலியவற்றைத் திருத்தமாய்ப் படிப்பிக்க ஆசிரியைகள் நியமிக்கப்பட்டிருக்கிறூர்கள்.

(2) 4-ம் 5-ம் வகுப்புகள் கீழ்ப்பாடசாலையின் புதிய கட்டிடத்தில் நடத்தப்படும்.

(3) சம்பத்திரிசியார் கல்லூரியில் 4-ம் வகுப்புத் தொடக்கம் கல்லூரி முழுவதிலும் சிங்கள வகுப்புகள் நடப்பிக்கச் சிங்கள ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறூர்கள் என்பதும் இவ்விடம் குறிப்பிடத் தக்கது.

## உங்களுக்குத் தெரியுமா ?

**1. திருச்சபைச் சாதாரண சங்கங்கள் எத்தனை நடந்திருக்கின்றன? கடைசியான சங்கம் எப்போது?**

20 சங்கங்கள் நடந்திருக்கின்றன. முதற்சங்கம் 325-ம் ஆண்டு நிக்கேயாவில் நடந்தது. கடைசியான சங்கம் வத்திக்கானிலே 1869-ம், 1870-ம் ஆண்டுகளில் நிகழ்ந்தது. இதிலே நடைபெற்ற பிரதான அலுவல் பாப்பாசரின் வழுவா வரத்தைப்பற்றிய விஷயமாகும்.

**2. தங்கள் சந்நியாசமடங்களைக் கையளிக்க மறுத்ததற்காக எட்டாம் என்றி மன்னன் மரண தண்டனைக் குட்படுத்திய ஆசீர்வாதப்பர்சபை மடாதிபர்கள் யாவர்?**

கிளாஸ்றன் பறியின் முத். றிச்சேட் வைற்றிங் மடாதிபரும், றீடிங்கின் முத். ஹியு குக் மடாதிபரும், கொல்செஸ்றரின் முத். ஜோண் பெச்சி மடாதிபருமே. இம்மூவரும் 1539-ம் ஆண்டு கொல்லப்பட்டார்கள்.

**3. அமெரிக்க ஐக்கிய தேசத்திலே அரசாங்க விடுமுறை நாட்கள் எத்தனை?**

ஒன்பது. அவையாவன:

(1) வருடப்பிறப்புத் தினம், தை 1. (2) வாஷிங்ரன்பிறந்ததினம், மாசி 22. (3) ஞாபகார்த்ததினம், வைகாசி 30. (4) சுதந்திரதினம், ஆடி 4. (5) தொழிற்தினம், புரட்டாசி 1. (6) கலம்பஸ்தினம், ஐப்பசி 12. (7) யுத்தசமாதானதினம், கார்த்திகை 11. (8) தோத்திரதினம், கார்த்திகை 20. (9) கிறிஸ்மஸ், மார்கழி 25.

**4. மார்கழி மாசத்தில் நாம் திருநாள் கொண்டாடும் இந்திய பெரிய அப்போஸ்தலர்கள் இருவரும் யார்?**

அர்ச். பிரான்சீஸ் சவேரியார் (மார்கழி 3.), அர்ச். தோமையார். இவரே 1000 வருடங்களுக்குமுன் கிறீஸ்து வேதத்தை இந்தியாவுக்கு முதன்முதலாகக் கொண்டுவந்தார்.

**5. கிறிஸ்மஸ் மாதம் எது? அதற்கு ஆயத்தஞ்செய்யும் காலம் எது?**

மார்கழிமாதம். அதற்கு ஆயத்தஞ்செய்யும்காலம், 2-ம் 9-ம் 16-ம் 23-ம் திகதிகளில் வரும் ஞாயிறுகளுடன் கூடிய ஆகமனகாலமாகும்.

**6. ஆகமனகாலத்தில் நாம் எப்படிநடந்துகொள்ளவேண்டும்?**

நமது வேதகடமைகளை மிக நன்றூய் அனுசரித்தும், வாரந்தோறும் பாவசங்கீர்த்தனஞ்செய்து திவ்விய நன்மைபெற்றும், ஞாயிற்றுக்கிழமைப் பூசையை அதிகம்பயபக்தியாகக் கண்டும், இயலுமானுல் தினமும் பூசை கண்டும், காலைமாலைச்செபம், செபமாலை ஆதியவற்றைக் கருத்தாகச் சொல்லியும்வரவேண்டும். ஆகமன காலமும் ஓரளவில் ஒருதபசுகாலமே. ஆதலால் ஒறுத்தல்ஆதியனவும்செய்து குடிலில்பிறக்கப்போகும் திவ்வியபாலனுக்குக் காணிக்கைவைக்க ஆயத்தமாகவேண்டும்.

**7. ஓர்யூதரல்லாத அப்போஸ்தலர் யார்?**

அர்ச். லூக்காவே. இவர் அந்தியோக்நகர்வாசியென்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அவரது இலக்கியப்போக்கும் அவர் ஒரு கிரேக்கர்என்பதை அத்தாட்சிப்படுத்துகிறது.

**8. உலகின் மகாப்பெரிய மெழுகுவர்த்தி எங்கே இருக்கிறது?**

இத்தாலியிலே பொம்பேய் நகரிலுள்ள கோவில்ஒன்றில் இருக்கிறது. இதன்நிறை 2,000 றூத்தல். பெறுமதி 37 லட்சம் டலர். இது கீர்த்திவாய்ந்த நாடகபாடகரான கறூசோ என்பவரின் ஞாபகார்த்தமாக இருந்து வருகிறது.

## யாழ்ப்பாணம்
## ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்க
## 28-வது வருடாந்த

# மகாசபைக்கூட்டமும்விழாவும்

யாழ்ப்பாணம், ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்க 28-வது வருடாந்த மகாசபைக்கூட்டமும், விழாவும் நிகழும் மார்கழி 15-ம், 16-ம் திகதிகளாகிய சனி, ஞாயிறு வாரங்களில் காலை 9 மணி தொடங்கி வண்ணூர்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடந்தேறும். நிகழ்ச்சிக்கிரம காலஅட்டவணை வருமாறு:—

### 15-12-51—சனிக்கிழமை

காலை மணி

| | |
|---|---|
| 9.00—9-30 | 1. சென்ற வருடாந்தக்கூட்ட அறிக்கை. |
| | 2. புதுவருட உத்தியோகத்தர் தெரிவு. |

அவைத் தலைவர்: **Dr. H. W. ஹவுஸ் அவர்கள்**
இலங்கைக் கல்விப்பகுதித் தலைவர்

| | |
|---|---|
| 9-30—10-00 | சங்கீதம். |
| 10-00—10-30 | தலைவர் வரவேற்பு, வாழ்த்துப்பத்திரம். |
| 10-30—11-00 | 28-வது ஆண்டு ஆவேதனம், வரவு செலவுக் கணக்குச் சமர்ப்பித்தல். |
| 11-00—11-30 | தலைமைப் பேருரை. |
| 11-30—12-00 | தீர்மானங்கள். |
| 12-00—12-30 | யோக்கியதா பத்திரங்கள், பரிசில்கள் வழங்கல். நன்றிகூறல். |

அவைத் தலைவர்: திரு. சு. நடேசபிள்ளை அவர்கள்
பரமேஸ்வரக் கல்லூரி அதிபர்

பிற்பகல்

| | |
|---|---|
| 2-30—3-30 | சங்கீதம். |
| 3-30—4-30 | உபந்நியாசம்: "பாலைக்கலி உணர்ச்சியூட்டும் ஒரு வாழ்க்கைச் சித்திரம்" — பண்டிதர் ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள், மட்டக்களப்பு அரசினர் கல்லூரி. |
| 4-30—5-00 | சங்கீதம். |
| 5-00—6-00 | உபந்நியாசம்: "செந்தமிழ்த் திறம்" — வித்துவான் க. வேள்ளைவாரணர் அவர்கள், தமிழ் விரிவுரையாளர், அண்ணமலைப் பல்கலைக் கழகம் |

### 16-12-51—ஞாயிற்றுக்கிழமை

காலை

| | |
|---|---|
| 9-00—10-00 | சங்கீதம். |
| 10-00—11-00 | பகவத்கீதை வெண்பா அரங்கேற்றம். — பண்டிதர் ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் |
| 11-00—11-30 | பட்டம்வழங்கல். |
| 11-30—12-30 | உபந்நியாசம்: "தமிழ்ஆராய்ச்சித்துறை" — Dr. மா. இராசமாணிக்கம்பிள்ளை அவர்கள், தமிழ் விரிவுரையாளர், விவேகானந்தர் கல்லூரி, சென்னை. |

பிற்பகல்

| | |
|---|---|
| 2-30—3-30 | சங்கீதம். |
| 3-30—4-30 | உபந்நியாசம்: — வித்துவான் க. வேள்ளைவாரணர் அவர்கள் |
| 4-30—5-00 | சங்கீதம். |
| 5-00—6-00 | உபந்நியாசம்: "சேக்கிழார்" — Dr. இராசமாணிக்கம்பிள்ளை அவர்கள், தமிழ் விரிவுரையாளர், விவேகானந்தர் கல்லூரி, சென்னை. |
| | நன்றிகூறல். |

## நொச்சிக்குளம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கிராமத்தவர் கூடியசமூகத்திலே மாங்குளத்தில் ஆரம்பித்த நாற்றுநடுகையில் பங்குபற்றி வான்ஒலியில் நிகழ்த்தியபாஷிதம் வான்ஒலி நிலையங்கட்குப் பரப்பும்படி பதிவுசெய்யப்பட்டது. இச்சங்கங்களை ஆக்குவதில் அரும்பிரயாசைஎடுத்த தலைமை ஆசிரியர் திரு. A. L. சின்னப்புஅவர்கட்கும், அவரது வலதுகரம்போலும் உதவி ஆசிரியர் திரு. A. யோசேப்அவர்கட்கும், F. P. O. திரு. N. சிவராசா அவர்கட்கும் எம்நன்றி உரித்தாகுக.

— தூதன்

—எகிப்திலுள்ள அநேக அரசாங்க ஆஸ்பத்திரிகளிலே நோயாளரைப்பராமரிக்கக் கன்னியாஸ்திரிமாரான நேர்ஸ்மாரை அனுப்பிவைக்கும்படி எகிப்திய அரசாங்கம் கன்னிகாசபைகளைக் கேட்டிருக்கிறது. அங்குபோகும் கன்னியாஸ்திரிமார் தங்கள் இஷ்டம்போலப் பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். ஆஸ்பத்திரிஒவ்வொன்றிலும் அவர்களுக்கென ஒவ்வோர் சிற்றூலயம் கட்டிக்கொடுக்கப்படும்.

— பிலிப்பைன்ஸ்நாட்டைச்சேர்ந்த கமிக்குயின்தீவிலுள்ள ஹிபொக்என்ற பெரியஎரிமலை மிகுந்தஉக்கிரத்துடன் அக்கினிக்குழம்புகளைக் கக்கிக்கொண்டு அமராதிருப்பதாலே அத்தீவில் வசித்திருந்த 35,000 சனங்களும் தீவிரமாக வெளியேற்றப்படுகிறூர்கள். இந்த எரிமலை கக்கியகாரணமாக இரண்டாயிரம் பேருக்குமேல் இறந்துபோய்விட்டார்கள்.

## நன்றி

மடுமாதாவென்றும், பாத்திமாநாயகியென்றும், பலபெயர்களால் எம்மை ஆட்கொண்ட, எமதருமைத்தாயின் அரவணைப்பினுலும். ஆசாரத்துக்குரிய மன்னூர் வேதசாட்சிகளின் மன்றூட்டினுலும் எனது மனைவி சேமமே மகனைப்பெற்றெடுத்தாள். வேதசாட்சிகளின் இராக்கினியின் நாமம் என்றும் எங்கும் புகழப்படுவதாக.

நெடுந்தீவு, ஞா. ம. ஆரோகணம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'எங்கள் பெரியசுவாமி'

( ஆசிரியர் A. S. Croos )

பேசாலைமக்களிலே சிலருக்குப் பேரைச்சொன்னால் விளங்காது. 'பெரியசுவாமி' என்றால் உடனேவிளங்கும். அவரை 'எங்கள்சுவாமி' 'எங்கள் சுவாமி' என்று மார்புதட்டிச் சொல்லிக்கொள்வார்கள் என்ஊர்மக்கள். பேசாலையைத் தற்போதையநன்னிலைக்குக் கண்ணியமாக உருவாக்கிய பெருமை அவருக்கே உரியது. ஓர் காலம் அஞ்ஞானபழக்கங்களும், மாந்திரீகங்களும் வேரூன்றியிருந்த எங்கள் கிராமத்தைப் பிசாசின் தலையில்நின்று சிக்கறுத்துத் தற்காக்கவந்தார் ஒரு தெய்வப்புருடர். அவர்தான் எங்கள் பெரியசுவாமி. அஞ்சாதவீரமும், அயராதஊக்கமும் படைத்த அவரது பிரயாசையாலும், இடையறாத செபத்தினாலும், அமிர்தமான பிரசங்கத்தாலும் பேசாலை தெய்வமணங்கமழும் நன்மக்கள் சாலையாக மாறியது. அயரதுவிடாமுயற்சியால் கடினசெபதபஞ் செய்த அண்ணாவிகளையும், பேயேடுகளைக் குப்பையாகக் கொட்டிக்குவித்துத் தீக்கிரையாக்கின மாந்திரீகர்களையும்பற்றி இன்னுமே எங்கள் ஊரில் புதுமையாகக் கதைக்கிறார்கள்.

கொடைப்பண்பில், முல்லைக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும் கொடுத்தவள்ளல்கள்கூட எங்கள்பெரிய சுவாமியிடம் பிச்சைகேட்கவேணும். அவரால் எங்கள்ஊரில் கடைத்தேறிய ஏழைக்குமர்கள்பலர். "சுவாமி இன்று எங்கள் வீட்டிற் பட்டினி"யென்று யாராவது சொல்லக்கேட்டால் கண்கலங்கிவிடுவார். உடனே தருமம்செய்ய எங்கிருந்தோ அவருக்குப் பொருள் வந்துவிடும். ஏழைகளையும், பசித்தவர்களையும் உபசரிக்கும் பண்பு அவருக்குத் தனியுரிமையாகும். ஏழைப்பிள்ளைகளைத் தமதுசெலவிலே படிக்கவைத்து உதவிசெய்தார். பணக்காரருக்கு ஒரு மதிப்பு, ஏழைகளுக்கு ஒரு மதிப்பு என்ற வேறுபாடு அவருடைய அகராதியிற் கிடையாது.

சிறுபிள்ளைகளை நேசிப்பதில் அவர் யேசுவின் மறு அவதாரந்தான். வஞ்சகம் இன்னதென்றறியாத தூயஉள்ளத்துக்கு அவர் ஒரு விளக்கமான எடுத்துக்காட்டு. உருவிற் பெரியவராயினும் சிறுபிள்ளைச்சுபாவம் நிறைய உடையவர். சிறுபிள்ளைகளின் மழலைமொழிகளைக் கேட்பது அவருக்கு இன்பமான ஓர்பொழுதுபோக்கு. அவர்களுக்கு இனிப்புப்பண்டங்களைக் கொடுத்துத் தாமும் சிறுபிள்ளைகள் போல அவைகளை விரும்பிஉண்பார்.

சுவாமியவர்கள் பிரசங்கத்தில் ஒரு சிங்கம். அக்காலமுதல் யாழ்ப்பாண மேற்றிராசனம் அவரையும் ஓர்பிரசங்க சிங்கமென அணிந்துரைசாற்றி அழைத்துவரலாயிற்று. அர்த்தபுஷ்டியும், உதாரணப்பொலிவும் நிறைந்தது அவரது பிரசங்கம். வேண்டியதை உள்ளத்தில் உறுத்துமாறு சொல்லும் பாங்குடையது. "பொன்னும் வெள்ளியும் கஞ்சலும் குப்பையும்," "நாங்கள் எல்லாரும் யாத்திரிகர்," "இந்தஉலகம் எங்கள் சொந்தமல்ல," "எங்கள்சொந்த வீடுமோட்சம்" என்பன எங்கள்சுவாமிகளின் சுலோகங்கள். பிரசங்கவேளையில் பேசாலைப் பெரியதேவாலயமே கிடுகிடுக்கும் அவரது தொனியில். கன்னெஞ்சும் கரைந்துவிடும் அவர் போதனையில். இன்றுங்கூட அவரது அமிர்தபோதகங்களை எங்கள் கோவிற் றூண்கள் சுவர்கள், பிரசங்கத் தொட்டிஎல்லாம் எதிரொலிசெய்து கொண்டேயிருக்கின்றன.

சிறுவர்களுக்கு ஞானஉபதேசம் புகட்டுவதில் அலாதியான பிரீதியுடையவர் சுவாமியார். ஒவ்வொருநாளும் அவரது மதியஉணவின்பின் பாடசாலை மாணவராகிய யாங்கள் அவரிடம் ஞான உபதேசங் கற்கப்போவோம். சோற்றுக்கு ஆசீர்வாதம்போட்டுச் சாப்பிடும்படி கற்பிப்பார். தாம் இப்போது அறைவீட்டில் உயிரோடு இருப்பதுபோல் ஆண்டவரும் தேவநற்கருணையில் உயிரோடு இருக்கிறார் என்று சொல்லித்தருவார். ஒருசதம் ஏழைக்குக் கொடுத்தால் ஆண்டவர் நூறுசதம் தருவார் என்று சொல்லுவார். தேவதாயார் எங்கள் சொந்தத்தாய் என்று வற்புறுத்துவார்.

எப்படி யேசு தம்மைத் தேவசுதன் என்று அதிகாரத்தோடு ஒப்பித்துக் காட்டினாரோ அதேபோல அவரும் தாம் தேவனால் அனுப்பப்பட்டதாக எங்களுக்கு உபதேசிப்பார். யாபேரும் அதையேற்று அவருக்குக் கீழ்ப்படிவார்கள். அக்காலத்தில் எங்கள்ஊரில் ஏற்படும் சண்டைசச்சரவுகளைத் தீர்த்துச் சமாதானம்செய்யும் நீதிவான் சுவாமியாரே. அடிபிடிசண்டை நடக்கும் இடங்களில் வீரத்தோடுசென்று குழப்பக்காரரை அடித்துத் துரத்துவார். யேசுநாதர் அக்கிரம வியாபாரிகட்குச் சவுக்கடி கொடுத்ததுபோலச் சுவாமியார் சண்டைபிடிக்கிறவர்களுக்குப் பூக்கம்பாளை அடிகொடுப்பார். யாபேரும் உடனே அடங்கிப்போவார்கள்.

சுவாமிகளின் இத்தகைய பண்பாடுகளை எழுதஎழுதப்பெருகும். அவர் பழுத்த தெய்வபக்தியுள்ளவர். யாவரிடத்தும் பேரன்பு பூண்டவர். அறநெறி வழுவாதவர். அறிவும் ஆற்றலும் மிக்கவர். பங்குக்கிறீஸ்தவர்களும், பிறரும்உவப்ப நல்விசாரணை புரிந்தவர். பிரயாசைக்கஞ்சிப் புறங்காட்டாத பெருமன்னர். ஏழைகட்காகத் துடிக்கும் உள்ளத்தையுடைய உத்தமர். எங்கிருந்தாலும் "பேசாலைக்கிறீஸ்தவர்களை மறக்கமாட்டேன்" என்று வாய்விட்டுக்கூறும் கருணையுடையவர்.

இப்போது சுவாமியவர்கள் எங்கே? எங்கே எங்கள் பெரியசுவாமி? ஐயையோ! இவ்வுலகில் அவர் இல்லையா? உலகைவிட்டு மறைந்தனரா! மக்களைப் பரிதபிக்கவிட்டு மறைந்தனரா? அந்தோ! கருணைபொழியும் திருக்கண்களை மூடிக்கொண்டனரா? ஆம். மறைந்தேசென்றார் எங்கள் பெரியசுவாமி. வண. ஸ்ரனிஸ்லாஸ் சுவாமி அவர்கள் தம்பூதவுடம்பை மறைத்துப் புகழ்உடம்பு தேடிக்கொண்டார். மார்கழிமாதம் 3-ந்திகதி திங்கள் வாரம் அர்ச். சவேரியாரின் திருநாளாகிய இன்று அவரது மறைவின்முதலாம் வருட நிறைவுநாள். மறைந்த எங்கள் தந்தையின் ஆன்மா சாந்தியடைந்து சர்வவல்லபதேவனின் பாதநிழலில் இளைப்பாற எல்லவரும் வேண்டுவோம்.

## திறப்பு விழா

சென்ற 29-11-51 வியாழக்கிழமை பிற்பகல் புலோப்பளைக் கிராமமுன்னேற்றசங்க வாசிகசாலை வடமாகாண ஏசன்றர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. புலோப்பளைக் கிராமவாசிகள் பிற்பகல் 4மணிக்கு அவரையும், பச்சிலைப்பள்ளி-கரைச்சிக் காரியாதிகாரியையும், மற்றும் கிராமமுன்னேற்றசங்க உத்தியோகஸ்தரையும் வாத்திய வரிசைகளுடன் ஊர்வலமாக வாசிகசாலைக்கு அண்மையில் அமைத்திருந்த சிங்காரப் பந்தருக்கு அழைத்துச் சென்றனர். கிராம முன்னேற்றசங்க தலைவர் திரு. வஸ்தியாம்பிள்ளை சீமாம்பிள்ளை ஏசன்றரை மாலைசூட்டி வரவேற்றனர். எல்லோரும் ஆசனத்தமர்ந்ததும் புலோப்பளைக் கத்தோலிக்க பாடசாலைத் தலைமைஆசிரியர் P. அந்தோனிப்பிள்ளை, ஆசிரியர் T. S. அந்தோனிப்பிள்ளை, ஆசிரியர் S. கார்த்திகேசு என்பவர்களால் வாசிகசாலையின்பயன், கிராமத்தின் குறைகள், கிராமவாசிகள் கடைப்பிடிக்க வேண்டிய சில முன்னேற்றமுறைகள் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

கிராமமுன்னேற்ற சங்கங்கள் தங்கள்தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்ய வேண்டுமென்றும், கிராமத்தவர்களினது அறிவுவளர்ச்சிக்கு இவ்வாசிகசாலை பெரிதும்பயன்படுமென்றும் ஏசன்றர்அவர்கள் கூறினர் ஈற்றில் ஆசிரியர் S. அந்தோனிப்பிள்ளை சமூகமளித்தஎல்லோருக்கும் நன்றித்துதி கூறியதும் சிற்றுண்டிஉபசாரணையுடன் திறப்புவிழா இனிதுநிறைவேறியது.

—நிருபர்

### யோசேவாஸ் முனிவரின்
## நூற்றாண்டு விழா

இலங்கையிலே கத்தோலிக்கசமயம் வேரூன்றித்தழைத்தோங்க இடையறாது உழைத்தவரும், ஈழநாட்டின் அப்போஸ்தலரெனச் சிறப்பாக அழைக்கப்படுகிறவருமான யோசேவாஸ்முனிவரின் பிறந்ததின ஞாபகார்த்த மூன்றாவதுநூற்றாண்டு நிறைவுவிழா புத்தளத்தைச்சேர்ந்த தளுவையிலுள்ள அர்ச். அந்தோனியார் ஆலயத்திலே அவ்வூரில் வர்த்தகம்செய்யும் ஸ்ரீ டீ, எஸ். சங்கரன் அவர்களைத் தலைவராகக்கொண்ட மலையாளமக்களால் கடந்த 2-12-51 ஞாயிற்றுக்கிழமை விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

உள்ளும் புறமும் கவர்ச்சிகரமாக அலங்கரிக்கப்பெற்று, ஒலிபெருக்கிகள் அமைக்கப்பட்டுத் தேசோமயமாய் விளங்கிய ஆலயத்தின் பதுமபீடத்தில் அன்றுகாலை 8 மணிக்குப் பங்குக்கட்டளைக்குரவர் வண. எஸ். விசுவாசம் சுவாமியவர்கள் பாடற்பூசை நிறைவேற்றினார். சுவாமியார் "ஸ்ரீலங்காவில் யோசேவாஸ்முனிவர்செய்த சிறந்த சேவைகள்" பற்றிப் பூசையின்போது செந்தமிழில் நிகழ்த்திய இனியபிரசங்கத்தைக்கேட்டு யாவரும் பரவசமடைந்தனர். பூசைக்குப்பின் "தெதேயும்"என்னும் தேவதோத்திர கீதம் பாடித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. முடிவில் ஒலிபெருக்கி தேனமிர்தம்போன்ற இனிய கீதகானங்களை இசைக்க, ஆலயத்தில் சமுகமளித்திருந்த அனைவர்க்கும் விழா வைநடாத்திய நிர்வாகக்குழுவினரால் ஓர்சிற்றுண்டிஉபசாரணை நடத்தப்பட்டது. பின்னர்இந்திய இராகருப்பிரசாதியான யோசேவாஸ் முனிவரின் மூன்றாவதுநூற்றாண்டுவிழாவை ஆடம்பரமானமுறையில் கொண்டாடுவதற்கு முன்வந்து முயற்சிஎடுத்துக்கொண்ட ஸ்ரீசங்கரனுக்கும், அவருடன்ஒத்துழைத்த மலையாளமக்கள் யாவர்க்கும் கட்டளைக்குரவர் நன்றிகூறியதும் விழாவெற்றிகரமாக முற்றுப்பெற்றது.

"நவசிபி"

## பெற்றோர்தின விழா

சென்ற 6-12-51 வியாழக்கிழமை வண. S. நீக்கிலாப்பிள்ளை சுவாமியவர்களின்பெயர்கொண்ட அர்ச்சியசிஷ்டர் திருநாள். அதனால் அன்றுகாலை 10 மணியளவில் ஊர்காவற்றுறை அர்ச்.அந்தோனியார்தமிழ்ப்பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் அவருக்கோர் வரவேற்புஉபசாரம் நடத்தினார்கள். வண. J. A. கருணாகார் சுவாமியவர்களும் அதில்கலந்துகொண்டார். பாட்டுகள் பேச்சுகள் முடிந்ததும் ஓர்தோட்டோபசாரணை நடாத்தப்பட்டது.

பின்னர் அன்றுமாலை 7 மணியளவில் பாடசாலையில் பெற்றோர்தினவிழா நடைபெற்றது. வண. S. நீக்கிலாப்பிள்ளைசுவாமியவர்கள் தலைமைவகித்தனர். முதலில் பாடசாலைத் தலைமை ஆசிரியர் S. B. சாமிநாதர் அறிக்கை வாசித்தார். அதன்மேல் படிப்பிலும், விளையாட்டுப்போட்டியிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டதும், ஆசிரியர் J. கபிரியேற்பிள்ளை "பெற்றோர்ஆசிரியர்"என்னும் விஷயமாகப் பேசினர். ஆசிரியர் G. அருளப்பு தொடர்ந்துபேசினார். வரவுஉத்தியோகஸ்தர் M. அல்பிறேட் பாடசாலைக்குப் பிள்ளைகளைக் கட்டாயம் அனுப்பவேண்டும்; அப்படிச்செய்யத் தவறும்பெற்றோர்மீது இனிமேல்வழக்குத்தொடரப்படுமென எச்சரித்தார்.

பேச்சுகள்முடிந்ததும் அபிநயநடனம் நடைபெற்றது. அதன்பின் பாடசாலைச்சிறுவர்களால் "கடமை" எனும் நாடகம்ஒன்று திறம்பட நடிக்கப்பட்டது. நடிப்பில் திறமைகாட்டிய இருவருக்குப்பரிசில்களும் வழங்கப்பட்டன. ஈற்றில் ஆசிரியர் R. E. யோசேவ் விழாவுக்குச் சமுகம்கொடுத்த பெற்றோர்க்கும், பரிசில்கள் உபகரித்தோர்க்கும் நன்றிகூறியதுடன் விழா இனிதுநிறைவெய்தியது.

S. L.

## நொச்சிக்குளம்

மதவாச்சியிலிருந்து மன்னார்ப் பக்கமாய் ஒன்பதாம்மைலில் அமைந்திருக்கும் சிறியகிராமம் இதுவாகும். செந்நெற்கழனிகளும், அவற்றை நீர்ப்பாய்ச்சும் சிறந்த நீர்நிலையங்களும் இங்கு ஏராளம். இங்கே இருபது கத்தோலிக்ககுடும்பங்களும், மூன்று இந்துசமயகுடும்பங்களும், எட்டுப் புத்தசமய குடும்பங்களும் உண்டு. இவர்கள்எல்லாரும் கப்பலேந்திமாதாவில் பற்றுள்ளவர்கள். இவ்வருடம் இடைப்போகம், சிறுபோகம், காலபோகம் என்பனவிளைவிக்க நீர்நிலைகளில் தண்ணீர் தேங்கி ஓடிக்கொண்டிருக்கிறது. எப்பக்கமும் உழவர் தொனி ஒலிக்கின்றது. தேவதாயின் பாதம் பணிந்துகொண்டே தொழிலை ஆரம்பித்தும், முடித்தும் வருகிறார்கள்.

பாடசாலை: நொச்சிக்குளம், நேரியகுளம், தம்பனைக்குளம், அடப்பன்குளம், மாங்குளம், வேப்பங்குளம், இலுப்பங்குளம் எனும் கிராமங்கள் பாடசாலையை ஆதரிக்கின்றன. இவ்வருடஆரம்பத்திலே புதிய தலைமை ஆசிரியரின்வரவோடு கொழும்பு அதிமேற்றிராணியாரினதும், யாழ்ப்பாண மேற்றிராணியாரினதும் தரிசனை இதற்குக் கிடைத்தது. இற்றைவரை37சிறுவர்க்குமேல் படித்திராத இப்பாடசாலையிலே இன்று 60 பேர்வரையில் படிக்கிறார்கள். இதனைவியந்து வைத்திய பரிசோதகரும், வித்தியா தரிசியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒத்துழைக்கும் A. O. திரு. செபஸ்தியாம்பிள்ளையைப் பாடசாலை வாழ்த்துகின்றது.

சேமிப்பு இயக்கம்: சிறுவரின் நல்வாழ்வுநோக்கி அவர்களிடையே சேமிப்பு இயக்கம் ஒன்றைத் தலைமை ஆசிரியர் ஆக்கியதின்பயனாகச் சிறுவர் பத்துப்பத்துச்சதவீதம் 315 ரூபாவரையில் சேர்த்து 48 சேமவங்கிப் புத்தகங்களில் போட்டிருக்கின்றனர். இதனைவியந்து சேமிப்புஇயக்க அதிகாரிகள் தலைமையாசிரியரிடம்சேமிப்பு முத்திரைகளைக் கொடுத்து, விற்பதற்கு அதிகாரம்அளித்திருக்கின்றனர்.

கிராமமுன்னேற்றசங்கம்: நொச்சிக்குளம், நேரியகுளம் என்பவற்றிற்கு ஒன்றும், தம்பனைக்குளத்தில் ஒன்றும், அடப்பன்குளத்தில்ஒன்றும், மாங்குளத்தில்ஒன்றும், வேப்பங்குளம் இலுப்பங்குளத்தில் ஒன்றுமாக ஐந்து சங்கங்கள் முன்னேற்றத்துக்குரிய தொண்டுகள் ஆற்றுகின்றன. இவற்றுடன் சமூகமுன்னேற்றசங்கம் தம்பனைக்குளம், அடப்பன்குளம், இலுப்பங்குளம் எனும் இடங்களில் கூடிப் பலதொண்டுகள் புரிகின்றன.

இளைஞர் விவசாயசங்கம்: இது பாடசாலைமாணவரிடையே இயக்கப்படுகின்றது. சிறுவர் கோழிவளர்ப்பு, வீட்டுத்தோட்டம், பாடசாலைத்தோட்டம், கிராமச்சுத்தம், நாற்றுநடுகை என்பவற்றில் பங்கெடுத்துப் பெற்றோர்க்குவேண்டிய உதவிபுரிகின்றனர். கார்த்திகைமாதம் 20-ந் திகதி அயல்

( தொடர்ச்சி 8-ம பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணு சொல்வது

அன்பார்ந்த சகோதாரே!

இது ஆகமன காலம். நத்தால் திருநாளுக்கு ஆயத்தஞ்செய்யும் காலம். திரு இரட்சகர் வருகைக்கு—பாலன் பிறப்புக்குக் காத்துக்கொண்டு இருக்கும் காலம்.

முதல்முறை குழந்தை யேசு பிறக்குமுன் யூத சனங்கள் அவரை ஆவலாய் எதிர்பார்த்து இருந்தார்கள். பிதாப்பிதாக்கள், தீர்க்கதரிசிகள் மூலமாக மெசியா எனப்படுகிற இரட்சகருடைய வருகையைச் சருவேசுரன் யூத சனங்களுக்கு நினைவூட்டி வந்தார். ஆகையால், அவர்கள் "கிழக்கில் உதித்த ஆதித்தனே, நித்திய பிரகாசத்தின் சுடரே, நீதியின் சூரியனே, எழுந்தருளும்; சனங்களின் இராயனே, அவர்களால் ஆசிக்கப்பட்டவரே, எங்கள் கர்த்தாவான தேவனாகிய இம்மனுவேலே, எங்கள் வேதாந்தியே, சனங்களின் நம்பிக்கையே, அவர்களின் இரக்ஷாதிகாரனே, வாரும் வாரும்" என்றெல்லாம் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் மாத்திரமல்ல. உலகத்தில் இருந்த எல்லாச் சனங்களும் ஒரு மீட்பரைக் காத்துக் கொண்டு இருந்தார்கள். ஏதேன் தோட்டத்தில் சருவேசுரன் கொடுத்த வாக்கைச் சகல சாதி சனங்களும் அறிந்திருந்தார்கள். ஆதலால் ஆவலாய் மீட்பரின் வருகையைக் காதலித்தார்கள்.

நீங்களும் யேசு இரட்சகரின் வருகையை ஆசித்து ஆவல் கொள்ளுங்கள். அந்தப் பெரிய திருநாளுக்கு ஞானஆயத்தஞ் செய்ய வேண்டும். அதற்கு வழி ஒன்று இந்தப் பக்கத்திலே தந்திருக்கிறேன். அதைக்கவனமாகப் படித்து ஆயத்தப் படுத்துங்கள். சுபம்.

உங்கள் அன்புள்ள
அண்ணு.

## திருப்பாலன் பிறப்புக்கு ஆயத்தம்

இல்லிடம்—
தூய்மையான இருதயம்
(நல்ல பாவசங்கீர்த்தனம்)

பொற் தொட்டில்—
9 நாட்பூசை

பஞ்சணைமெத்தை—
5 சிலுவைப்பாதை

குளிருக்குப்போர்வை—
10 தேவநேச முயற்சிகள்

விடிவிளக்கு—
10 விசுவாச முயற்சிகள்

நாலுசாம விழிப்பிருக்கை—
12 செபமாலை

அன்பான முத்தம்—
7 முறை சற்பிரசாதம் உட்கொள்ளுதல்

காணிக்கை—
பிறர்சிநேகம் நிறைந்த இருதயம்.

## ஆண்டவரே ஆகாரம் தாரும்

இந்தியா தேசத்தில் தமிழருக்கும் சோனகருக்கும் இடையில் நடந்த பெரிய கலகத்தைப்பற்றிக் கேள்விப் பட்டு இருப்பீர்கள். சோனகரால் எத்தனையோ பெரிய கத்தோலிக்க குடும்பங்கள் அழிக்கப்பட்டன. அநேக மக்கள் பசி பட்டினியால் வாடினார்கள்.

அந்த நாட்டில் செல்வமாகவும், தேவபக்தியுடனும் வாழ்ந்த ஒரு குடும்பமும் இதில் அகப்பட்டுக் கொண்டது. அந்தக் குடும்பத்தில் எஞ்சியவர்கள் இரண்டு குழந்தைதகளும், அவர்களின் பேத்தியாருமே. தந்தையும், தாயும் படுபாதகரால் கொல்லப் பட்டனர். அவர்களிடம் இப்போது ஒரு பொருளும் இல்லை. வயற் புறத்திலே ஓர் சிறு குடிசையில் வசித்தார்கள். வயதுசென்ற அக்கிழவி தனது முயற்சியால் அக்குழந்தைகளுக்கு ஒருவேளை உணவு அளித்து வந்தாள்.

ஓர் ஞாயிற்றுக் கிழமை, அவர்களிடம் உண்ண உணவும் ஒன்றும் இருக்கவில்லை. உதவுவோரும் இல்லை. கிழவி பிள்ளைகளைக் கூப்பிட்டுத் தன்னருகில் இருத்திச் செபம்செய்யும்படி சொன்னாள். மூவரும் செபம் செய்யத் தொடங்கினார்கள். அவர்கள் எவ்வாறு மன்றாடினார்கள்? அச்சிறு பெண்குழந்தை: "அன்னைமரி மாதாவின் திரு உதரக் கனியே! எங்கள் கோவே! எங்களுக்கு வயிறு நிறைந்த ஆகாரம் தாரும்." அவளுக்கு ஆண்டவர் உணவு அளிப்பார் என்று பூரண நம்பிக்கை இருந்தது. இதனால் சாப்பாட்டுக் கோப்பையைக் கழுவி வைக்கும்படி பேத்தியாருக்குச் சொன்னாள். இறுதியில் அவள் வெற்றி பெற்றாள். வயிறார உணவு கிடைத்ததும் அல்லாமல் அநேகநாள் உணவிற்கும் வழி தேடினாள் அச்சிறுமி. உங்களுக்கு இது ஆச்சரியமாக இருக்கலாம். சொல்லுகிறேன் கேளுங்கள்.

அவர்கள் அநேக நேரம் ஆண்டவரை மன்றாடினார்கள். இரவு வந்தது; படுக்கைக்கு நேரம் வந்தாலும் அச்சிறுமி நம்பிக்கையை இழக்கவில்லை. இந்த நேரத்தில் யாரோ கதவிற் தட்டினார்கள். வெளியே சென்று பார்த்த கிழவி அங்குவந்தவர் தங்கள் உறவினர் எனக்கண்டதும் உள்ளே அழைத்துச் சென்றாள். அங்குவந்தவர் சிறுமியின் பெரிய தந்தையார். அவரைக்கண்டதும் சிறுமி ஓடிச்சென்று "கொண்டு வந்த சாப்பாட்டைத் தாருங்கள்" என்று கேட்டாள். இது அம்மனிதருக்குப் பெரிய ஆச்சரியத்தை உண்டுபண்ணியது. உண்மையில் அவர் உணவு கொண்டு வந்திருந்தார். "குழந்தாய்! நான் சாப்பாடு கொண்டு வந்தேன் என்று உனக்கு எப்படித் தெரியும்" என்று கேட்டார். அவள் நடந்தது எல்லாம் சொன்னாள். இதைக் கேட்ட அப்பெரியார் அச்சிறுமியின் விசுவாசத்தை மெச்சினார். உணவு அளித்த ஆண்டவரை எல்லோரும் தோத்திரித்தார்கள். மறுநாள் அப்பெரியார் அந்த மூவரையும் தன்வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

— கரம்

## கழுதையின் சிந்தனைகள்

பாரத்தைப் பாவாய் பண்ணுமலும், தூரத்தைப் பாராமலும் துரிதமாய் நடந்து செல்கிறது சூசையின் கழுதை. முன்னொருமுறை மரியம்மாளை ஏற்றிப் போனது இக்கழுதை. இந்தமுறைப் பயணம் ஒரு விசேஷமானது என்று ஏதோ ஒரு விதமாக ஊகித்துக் கொண்டது.

தான் கழுதை என்றாலும், தேவ தாயைச் சுமந்து போகும் பாக்கியம் பெற்றிருக்கிறது. அதற்கு அளவில்லா ஆனந்தம். தனக்குக் கிடைத்தது போலத் தன் பேரனுக்கும் கிடைக்க வேணும் அந்தப் பாக்கியம். பேரனுக்குக் கூடினபாக்கியம். ஏனெனில், மரியாயின் மைந்தன் யேசு இரட்சகரை அது சுமந்து செல்லும்.

அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை



செகமீட்பராகிய திவ்விய பாலனின்
நவதின உற்சவம்

ஆசா. கபிரியேல் பச்சேக்கு சுவாமிகளால்
இயற்றப்பட்டது.
நல்லூர், ஞானப்பிரகாச சுவாமிகளால்
1906-ம் ஆண்டு புதுக்கி அச்சிடப்பெற்றது.
நாற்பத்துநான்கு வருடங்களின்பின்
இப்போது 2-ம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது.

நத்தால் திருநாளைப் பூச்சிய பயபத்தியுடன்
கொண்டாட உதவியான
நோவனைத் தியானங்களும், செபங்களும்
திவ்வியபாலனின் பிறப்பைச்சார்ந்த ஆசைகள்,
புகழ்ச்சிகள், பிரார்த்தனைகளும் அடங்கியது.

— விலை 75 சதம் —

யாழ்ப்பாணம்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை

1
நேசப்பெருங்கடல்காட்டி—பொல்லா
நீசரைக் காக்க நிலத்தில் குதிப்பான்
யேசு எனும் பெயர்த் தெய்வம்—
மண்ணை!
ஈடேற்று வானைச் சுமந்திடும் தாயே

2
உம்மைச் சுமப்பதும் நானோ?—இந்த
உத்தமன் சூசை நடப்பதும் ஏனோ?
அம்மா! உமது பொறுமை—கழுதை
ஆனஎன் நெஞ்சை அறுக்குதே
ஐயோ!

3
தேவன் வசிப்பிடம் என்று—பாம்பின்
தீமையைக் காலால் நசுக்குவீர்
என்று
பாவப் புவி அறியாதோ? — எந்தப்
பஞ்சம் பிணியிலும் தஞ்சம்நீர்
அம்மா

4
வீர விலங்கில் எளியோம்—எங்கள்
மீதே யிருக்க விரும்பும் கரும்பே!
பேரன் கழுதை என்றாலும்—உந்தன்
பிள்ளையைத் தூக்க வரமருள்
வாயோ?

— அழகு

## பட்டாஸ்

பட்டாஸ் என்றால் ஆசைப்படாத சிறுவரே கிடையாது. நத்தால் திருநாள் கிட்டி வரவர உங்களுக்கும் பட்டாசின் எண்ணமும் அதிகமாக வருகிறது அல்லவா? எங்காவது ஒரு வீட்டிலோ, கோவிலிலோ பட்டாசுச் சத்தம் கேட்டால் அவ்வூர்ப் பிள்ளைகள் எல்லாம் அங்கு கும்பல் கூடி விடுவார்கள். பிள்ளைகளைக் கவரும் சக்தி இருப்பது போல இந்தப் பட்டாசுக்கு வேறு சக்தியும் உண்டு. ஒரு ஆயிரம் பட்டாஸ் கட்டுகளைத் திடீரென்று வெடிக்கச் செய்தால் அந்த ஆதிர்ச்சியே பெரிய கட்டிடங்களை விழச்செய்யும். இப்படிப் பட்ட சக்தி பெற்ற பட்டாசுக்குச் சீனவெடி என்ற பெயரும் உண்டு. அப்பெயரையே பல பிள்ளைகள் சீனு வெடி என்றும் சீனி வெடி என்றும் தங்கள் செல்லப் பாஷையில் கூறுவர். இவ்வெடி முதன்முதல் சீனு தேசத்திலே கண்டு பிடிக்கப் பட்டது. அதனாலே அதற்குச் சீன வெடி என நாமம் சூட்டப்பட்டது.

பிள்ளைகளே! இந்தச் சீன வெடியில் என்னென்ன பொருள்கள் கலந்து இருக்கின்றன தெரியுமா? அவை தான் கரி, கந்தகம், பொட்டாசியம் நைட்றேட் என்ற உப்புகள். இவற்றில் கரியும், கந்தகமும் வெடி மருந்துகள் அல்ல. பொட்டாசியம் நைட்றேட் தான் முக்கியமான வெடி மருந்து.

"எண்ணும் எழுத்தும் கண்
ணெனத்தகும்"
உங்கள் பிள்ளைகள்
கணித பாடத்திற் கெட்டிக்காரர்
ஆகவேண்டுமா?
அவரவர் வகுப்புக்குரிய
"படிமுறைக் கணிதத்தை"
உடனேயே வாங்கிக் கொடுங்கள்
3-ஆம்வகுப்பு படிமுறைக் கணிதம்
ரூபா 1-40.
4-ஆம்வகுப்புப் படிமுறைக்கணிதம்
ரூபா 1-60.
5-ஆம்வகுப்புப் படிமுறைக்கணிதம்
ரூபா 1-80.
(எல்லாப் புத்தக வியாபாரிகடமும் கிடைக்கும்)

## மன்றாட்டுப்பலன்

காத்திராப்பிரகாரம் எனதரிய சகோதரிக்கு உண்டுபட்ட பயங்கரநோய் ஒன்றரை மாசகாலமாய் நாளொருவண்ணம் அதிகரித்து யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் பேர்போன டக்றர்மாரால், பணச் செலவைப்பாராது விசேஷவைத்தியம் செய்வித்தும் குணமுறாது, மரணக்குறிகாணப்படவே வீடு கொண்டுவந்து பெற்றார் சகோதரர் பிரலாபிக்க அந்திய தேவதிரவியஅனுமானங்களும் நிறைவேற்றப்பட்டன. வயசு 22. விவாகம் நிறைவேறி இன்னும் நாலுமாசமாக முன்னரே என் தங்கையை இழக்கப்போகிறேனே என்றுபரிதபித்து யேசுவின் திருஇருதயத்தில் என் பூரண நம்பிக்கை கொண்டு நற்சுகவரந்தந்தருள வேண்டுதல் செய்தேன். என்மன்றாட்டுக் கிடைக்கப்பட்டது. தங்கை அதிசயவிதமாய்ப் பூரணசுகம்பெற்றா. யேசுவின் திருஇருதயம் என்றும் ஸ்துதிக்கப் படுவதாக.

லில்லி மாகிறேற் திருச்செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாத்திமா அன்னையின் அழகிய சுருபங்கள்

இலங்கைக்குவந்த பரிசுத்த பாத்திமா அன்னையின் சுருபத்தைப்போன்ற அழகிய சுருபங்கள் பல 'சைஸ்'களிலும் வந்திருக்கின்றன. 6 அங்குலம்முதல் 60 அங்குலம் வரையிலும் கிடைக்கும்.

மற்றும் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு வேண்டிய அழகிய சுருபங்களும், படங்களும், கார்டுகளும் பல ரகங்களிலும் தருவித்திருக்கிறோம். அழகிய வேதக்கலண்டர்களும் கிடைக்கும். தேவைக்கு ஆடர் கொடுக்கவும்:

**St. Michael's Art Studio,**
6, Jampettah Street,
COLOMBO 13.


Mal. E. No. 513. Engels

## தனக்குச் சொந்தமானதைக் காடுதிரும்பப் பெறுகின்றது.

நியூகினியாவுக்குவடக்கே பியாக்என்ற சிறியதீவு இருக்கின்றது. இதன் நாமம் "கடலுக்குவெளியே எழுந்தது" எனும் அர்த்தம்கொண்டது. முற்றும் சரியானபெயர் இதுவாகும். ஏனெனில், சமுத்திரத்தின்மத்தியிலே உலகில் மறக்கப்பட்ட ஓர்பகுதியாக ஏறக்குறைய உட்செல்லற்கரிய ஓர் அடர்ந்த காட்டுடன்கூடியதாய் அது இருக்கின்றது.

இந்தநிலைமை குறைந்தபட்சம் இரண்டாவது உலகயுத்தம் மூண்டுகொள்ளுகிறவரையில் உண்மையாயிருந்தது. அதன்மேல் பியாக் தீவின் வாழ்க்கை ஏறக்குறையப் பெரிதும் மாற்றமடைந்தது. இந்தத்தீவு நேசதேசங்களின் விமானப்படைத் தளமாயிற்று. ஓர் காலம் அவ்வளவு சமாதானம்நிலவிய இடமாயிருந்தது. திடீரென அதிகம் கைத்தொழில்விருத்தியுடையதாக மாறியது. அடர்ந்தகாடு வெட்டப்பட்டுப் பாசறைகளும், விமானங்கள் தங்குமிடங்களும், ஏறியிறங்கும் பாதைகளும் மாயவித்தையால் உண்டானவைபோல் காட்சியளித்தன. இரவும் பகலும் வாழ்க்கை புழக்கமுற்றது. ஆகாயவிமானங்கள் இடையறாது ஏறுவதும் இறங்குவதுமாய்இருந்தன. பியாக்தீவு யுத்தகொடுமைக்குத் தப்பிக்கொள்ளவில்லை.

அவசியந்தேவையான கட்டடங்களையும், வீதிகளையும் அமைக்கும்விஷயமாய், வேண்டிய உதவிசெய்து, அங்குள்ளசுதேசிகள் தங்கள்பங்கைச் செய்துவந்தார்கள். அதுவரை ஆடம்பர சுகபோகங்கள் அறியப்படாமலிருந்த பப்புவானியர்களின் குடிசைகளிலே ஆங்கிலசிகறெற்றுகள், காக்கிஉடைகள், பூட்டுப்பிணைச்சல்கள், உள்ளுடைகள் ஆதியன தலைகாட்டத்தொடங்கின.

ஆயினும் யுத்தம்நின்றபின் பியாக் தீவுக்குத் திரும்பவும் சமாதானம் வந்தது. நேசதேச போர்வீரர்கள் தனிமைப்பட்ட பியாக் தீவிலிருந்து தங்கள் சுயநாடுகளுக்குத் திருப்பியனுப்பப்பட்டார்கள். விமானங்கள் ஒதுங்கிய கட்டிடங்கள் அழிவின்வாய்ப்பட்டன. போக்குவரத்துப் பாதைகளைத் தீவிர வளர்ச்சியுள்ள புல்பூண்டுகள் மூடிக்கொண்டன. அவர்கள் விட்டுப்போன ஆகாயவிமானங்களோ தனக்குச் சொந்தமென்று திரும்பவும் உரிமையாக்கிக்கொண்ட காட்டுக்கு இரையாயின. தூண்டச்சுகள் படர்கொடிகளால்சுற்றிப்படரப்பட்டன. விமானங்கள் ஏறியிறங்கும் பாதைகளிலே பிறநாட்டுப் புஷ்பங்கள் பூத்திருக்கின்றன. ஓர்காலம் அவ்வளவு பெருமையாக ஆகாயத்தைக் கிழித்துநின்ற ஆகாயவிமானங்களின் உள்ளறைகளிலே பல்லாயிரக்கணக்கான வெள்ளைஎறும்புகள் தங்கள் உறைவிடத்தைத் தேடிக்கொண்டன.

காடானது விசேஷமாய்த் தனது கிருமிகள்வழியாக மனிதவர்க்கத்துக்கு முடிபற்றதொல்லையை உண்டுபண்ணும் விதம் இதுவாகும். ஏனெனில், அவைகள் நோய்களைப் பரப்புகின்றன. அவற்றிலெல்லாம் அனோப்பிலெஸ் எனும் நுளம்பால் மறைமுகமாக உண்டாகின்ற மலேரியாவே மிகமோசமான அழிவைச் செய்வதாகும். இந்தநம்முடையஉலகின் அயனுந்த—உபஅயனுந்த நாடுகளிலே கூடவோ அல்லது குறையவோ அதுபொதுவிலே உண்டாகிறது. இந்தப்பயங்கரசுரம் உண்டாவதாலே வருடந்தோறும் லட்சக்கணக்கானோர் வருந்துகின்றார்கள்.

ஆயினும் குயினைனைக்கொண்டு சித்திகரமான ஓர்மருந்தை மனிதன்பெற்றிருக்கிறான். தற்போது இல்லாதொழிந்த சர்வதேசசங்கத்தால் நியமிக்கப்பட்ட மலேரியாநிபுணர்களின் கம்மிற்றியானது, 1938-ம்ஆண்டு விடுத்தஅறிக்கையிலே குயினைனைச் சிபாரிசுசெய்திருக்கிறது. ஓர் தடைநடவடிக்கையாக மலேரியாக் காலமுழுவதும் தினமும் 6 கிறேய்ன் குயினைன் பாவித்துவரவேண்டுமென இந்தநிபுணர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். இன்னும் ஓர்கால் மலேரியா காணுமிடத்து அதற்கோர் மருந்தாக 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைன் பாவித்துவர வேண்டுமென விதித்திருக்கிறார்கள்.

## புதிய வயோதிகர்சாலை

கேகாலைப்பட்டினத்திலே நவமாக அமைக்கப்பட்டுள்ள வயோதிகர்சாலையைச் சென்றவெள்ளிக்கிழமைபிற்பகல் பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்கள் திறந்துவைத்தனர். கேகாலைக் கன்னிகாமடத்துப் பிறர்சிநேக கன்னியாஸ்திரிமாரால் நடத்தப்படவிருக்கும் இந்தவயோதிகர்சாலை கத்தோலிக்கர், பிறசமயத்தவர்என்ற பேதம்பாராது சகலரையும்ஏற்றுப் பராமரித்துவரும். கிழவர்களுக்கும், கிழவிகளுக்குமாக வேறுவேறான வாட்டுகளைக் கொண்டுள்ள இது 40பேருக்குப் போதிய இடவசதியைக் கொண்டுள்ளது. இதனைஅடுத்து ஓர்சிற்றாலயமும், ஓர் வயோதிககுருவானவர் வசிப்பதற்கான ஓர்மனையும் இருக்கின்றன. இந்த வயோதிகர்சாலைவிஷயமாய் அப்பட்டினத்திலே ஓர்கத்தோலிக்கபிரமுகராய் விளங்கியிருந்து காலஞ்சென்ற திரு. அல்பேட் விக்கிரமசிங்கஅவர்கள் தமதுமரணசாதனத்தில் காட்டியிருந்த விருப்பை நிறைவேற்றி அவர்குடும்பத்தினர் ஒருலட்சம் ரூபா செலவில் இதனைக்கட்டியிருக்கின்றனர். இக்குடும்பத்தினரிலே கேகாலைப்பட்டினசங்கதலைவரான திரு. வின்சென்ற் விக்கிரமசிங்கஅவர்களும் ஒருவர். பிரதமர்இதனைத்திறந்துவைத்தபின் அவரது பிரதிமைப்படம்ஒன்றையும் அதில் ஸ்தாபித்தனர்.


# ...நிம்மதியான நித்திரை






என்ன ஆச்சரியம் ... இப்பொழுதெல்லாம் இராக்காலங்களில் நாங்கள் எழுந்திருப்பதே இல்லை. காரணம் குழந்தைக்கு லெக்டோஜன் உணவு கொடுப்பதுதான். தாய்ப்பாலில் உள்ள சத்துக்கள் பூராவும் லெக்டோஜனிலும் கிடைப்பதால் குழந்தை திருப்தியடைகிறது. மேலும் லெக்டோஜன் எளிதில் சீரணமாவதால், சீரணஉறுப்புக்கள் ஓய்வுபெற்றுக் குழந்தைக்கு நல்லநித்திரையைக் கொடுக்கின்றன. ஆம், எல்லா இடங்களிலுமுள்ள தாய்மார்கள் இதை ஒத்துக்கொள்ளுகின்றனர் ... ஆகவே உங்கள் குழந்தைக்கு லெக்டோஜன்உணவு கொடுங்கள்.

# லெக்டோஜன்

குழந்தைகளுக்கேற்ற சிறந்த உணவு.



இதோ! இதோ!!

# நத்தார் விற்பனை

யாபேரும் கண்ணியப்படுத்தும்

## டைறம்ஸ் சாய்ப்பில்

நத்தார் ஜவுளி விற்பனை.

உள்ளம் குளிரச் செய்யும்

### முதற்தரமான சேலைத் தினிசுகள்

பார்வைக்கு அழகான, மனநிறைவுக்கு ஏதுவான, கவர்ச்சிக்குரிய பண்டிகைக்கென்று வரவழைக்கப் பெற்ற புடவைகள் சகாயவிலை !!

உலகத்தின் பல பாகங்களிலுமிருந்து தெரிந்தெடுக்கப் பட்ட எல்லாத்தருணங்களுக்கும் பாவிக்கக்கூடிய விதம்விதமான பட்டுப்புடவைகள்.

இந்தியா தேசத்திலிருந்துவரும் தனிப் பட்டுப் புடவைகள் சோளி சட்டைக்கேற்ற துண்டுகள்.

பிள்ளைகளுக்கு உடுப்புக்கேற்ற விதம்விதமான சீட்டிகள், பட்டுகள், பாவாடைகள், மேற்சட்டைகளுக்குரிய புடவைகள்.

வீட்டைச் சிறப்பிக்கும் சொகுசைக்கொடுக்கும் படுக்கைச் சீலைகள்.

இவ்வரிய சந்தர்ப்பத்தை இழந்து போகவேண்டாம்.

## டைறம்ஸ்

சேலைகளுக்குப் பிரக்கியாதி பெற்றவர்கள்.

ஆயிரக்கணக்காக வெட்டுத் துணிகள் சகாயவிலையில் விற்பனைக்குண்டு.


Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 13 1951.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org